# திருமறைத்தீபம்

**BIBLE LAMP**

மலர் 3 | ஏப்பிரல் - ஜுன் 1997 | இதழ் 2


## ஒரு வேண்டுகோள்

*வாசகர்கள் முகவரி மாறும்போது தயவு செய்து உடனடியாக எமக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறோம். அத்தோடு சரியான முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். இதன் மூலம் பத்திரிகையை நீங்கள் இடையராது தொடர்ந்து பெறவும், தபால் செலவைக் குறைக்கவும் எமக்குத் துணை புரியலாம். புதிய வாசகர்கள் இதனைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

## இந்த இதழில்


- வில்லியம் பார்க்ளே
- மரணத்தினால் உண்டாகும்
- கிறிஸ்தவக் கோட்பாடுகள்
- கிருபையின் போதனைகள்
- வில்லியம் கேரி
- புத்தக விமர்சனம்
- எண்ணங்கள்


## பழைய சுவிஷேசமும், புதிய சுவிஷேசமும்

சுவிஷேசத்திலும் பழசு புதிதென்று இருக்கின்றதா? என்று நீங்கள் கேட்கலாம். ஆம்! நண்பர்களே பழைய சுவிஷேசம் என்று நாம் குறிப்பிடுவது கர்த்தர் தனது வார்த்தையின் மூலம் நமக்கருளின மெய்யான சுவிஷேசத்தைத்தான். ஆனால் புதிய சுவிஷேசம் திருமறையைத் திரிபுபடுத்தி இன்று நம்மத்தியில் உலவி வரும் போலிப் போதனையாகும். ஒன்று கர்த்தரை மகிமைப்படுத்துகிறது; மற்றது மனிதனைக் கர்த்தரின் இடத்திற்கு உயர்த்த முனைகிறது. ஒன்று இரட்சிப்பிற்கு கர்த்தரை நாடிவரும்படி அழைப்பு விடுக்கின்றது; மற்றது நாம் கடவுளின் துணையோடு நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது. ஒன்று கிறிஸ்துவின் மீட்புப்பணியின் மகிமையை எடுத்துரைக்கின்றது; மற்றது அப்போதனையை அலட்சியப்படுத்துகின்றது. பழைய சுவிஷேசத்தைப் போலத் தோற்றமளிக்க முனையும் புதிய சுவிஷேசம் உண்மையில் போலியானது. இன்று உலகெங்கும் ஆயிரக்கணக்கான சபை மேடைகளில் புதிய சுவிஷேசத்தின் ஆட்சியைக் காணலாம். மாயமானைப் போலப் போலிப்போதனை மக்களைக் கவரத் தவறுவதில்லை. மானை நம்பி மனைவியை இழந்த கதை நாயகனைப் போல போலியை நம்பி சத்தியத்திற்கு இன்று அநேகர் மதிப்புக் கொடுக்கத் தவறுகின்றனர். இவ்விதழின் இரு முக்கிய ஆக்கங்கள் இதையே எடுத்து விளக்குகின்றன. வில்லியம் பார்க்ளே சத்தியத்தை அடகு வைத்த மனிதன். அம்மனிதன் தனியொருவனாக கிறிஸ்தவ உலகில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை இவ்விதழ் எடுத்துரைக்கிறது. சீர்திருத்தவாதியும், தூய்மைவாதியுமான ஜோன் ஓவனின் அழியாப் படைப்பான "மரணத்தினால் உண்டாகும் வாழ்வு" எனும் நூலுக்கு வழங்கப்பட்ட அருமையான முன்னுரையின் முதல் பகுதியையும் இவ்விதழில் காணலாம். பழைய புதிய சுவிஷேசங்களை அடையாளங் கண்டு திருமறைபூர்வமான பழைய சுவிஷேசத்தைத் தொடர்ந்து நம்பிப் பிரசங்கித்து கர்த்தருக்கு மகிமை தேடித் தரும் வாழ்க்கையை நீங்களும் நானும் வாழத் தேவன் நல்லருள் புரிவாராக. - ஆசிரியர்.

திருமறைத்தீபம்
BIBLE LAMP

ISSN 1173-7255
ஏப்பிரல் - ஜூன் 1997
இதழ் 2

ஆசிரியர்: ஆர். பாலா
Phone & Fax: + 64 9 527 1522
E-mail: bala@ihug.co.nz

வெளியிடுவோர்:
சவரின் கிறேஸ் வெளியீடுகள்
Sovereign Grace Publications
த. பெ. எண் 62-159
சில்வியா பார்க்
ஆக்லாந்து
நியூசிலாந்து

ஆசிரியருக்கான கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
Bible Lamp
P. O. Box 62-159
Sylvia Park
Auckland
New Zealand
or
E-mail : bala@ihug.co.nz

காலாண்டுப் பத்திரிகையான திருமறைத்தீபம் ஓர் இலவச வெளியீடு.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப் படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

# வில்லியம் பார்க்ளே

## ஒரு சாதாரண மனிதன்!!!

வில்லியம் பார்க்ளேயின் நூல்களை எங்கும் காணலாம். நூல் நிலையங்கள், பாவிக்கப்பட்ட புத்தகக் கடைகள், மூன்றாம் உலக நாடுகளில் வாழும் போதகர்களின் படிப்பறைகள், ஸ்கொட்லாந்தின் போதகர்கள் அனைவரதும் இல்லங்கள், என்று பார்க்ளேயின் நூல்கள் நுழையாத இடங்களே இல்லை. பார்க்ளே எழுபது நூல்களை எழுதியுள்ளார். அவரது பதினேழு வால்யூம்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டு விளக்கவுரைகள் நான்கு மில்லியன் பிரதிகள் வரை விற்பனையாயின. ஆபிரிக்க, ஆசிய நாட்டுப் போதகர்களை அவை அடைய வேண்டுமென்பதற்காக பார்க்ளே தனது புத்தகங்களுக்குப் பணமே வாங்கவில்லை. அருமையான உதாரணங்களையும், சுருக்கமான பந்திகளையுடைய சிறு அத்தியாயங்களையும் கொண்டதாக அவரது எழுத்துக்கள் அமைந்தன. அவரது நூல்கள் வியக்கத்தக்க வரலாற்று விபரங்களைக் கொண்டவை. தான் ஒரு குழப்பமற்ற 'சாதாரண மனிதன்' என்ற உருவத்தை மற்றவர்கள் மனதில் பதிய வைப்பதை பார்க்ளே நோக்கமாகக் கொண்டிருந்தார். இது அவரது நூல்கள் பலவற்றின் தலைப்பாகவும் அமைந்தது. ஒரு சாதாரண மனிதனின் ஜெபநூல், ஒரு சாதாரண மனிதனின் பார்வையில் அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை என்பன இவற்றில் சில. ஞாயிறு பாடசாலைகளுக்கும், 'போய்ஸ் பிரிகேடுகளுக்கும்' பாடங்களை அவர் எழுதியிருந்தார். பிரித்தானிய வார இதழ், எக்ஸ்பொசிட்டரி டைம்ஸ் ஆகிய இதழ்களிலும் அவர் தொடர்ந்து எழுதி வந்தார்.

### 'இதுவே எனது வாழ்க்கையின் இலட்சியம்'

ஸ்கொட்லாந்தின் வட பகுதியில் உள்ள 'விக்' என்ற இடத்தில் 1907 ஆம் ஆண்டு பார்க்ளே பிறந்தார். ஸ்கொட்லாந்து மக்களின் தாய் மொழியான 'கேய்லிக்' என்ற மொழியைப் பேசிய, கடவுள் பக்தியுடைய, வங்கித் தலைமை அதிகாரியான தனது தந்தையின் ஒரே மகனாக பார்க்ளே இருந்தார். ஒரு ஞாயிறு தினத்தில் சிறுவனான பார்க்ளே தனது தந்தையின் பிரசங்கத்தைக் கேட்டபின் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, உணர்வுகளால் உந்தப்பட்டு இதையே தன் வாழ்க்கையிலும் செய்ய வேண்டுமென்ற பெருந்தீர்மானத்தை எடுத்தான்.

1933 முதல் பதினான்கு வருடங்கள் ரென்பிரியு பிரஸ்பிடீரியன் சபைப் போதகராக இருந்த பார்க்ளே, 1947 முதல் 1974 வரை ஸ்கொட்லாந்து பல்கலைக்கழகத்தில் முதலில் விரிவுரையாளராகவும் பின்பு பேராசிரியராகவும் கடமையாற்றினார். வானொலியிலும், டெலிவிசனிலும் பார்க்ளே தொடர்ச்சியாக செய்திகள் அளித்தார். பிரித்தானியாவின் வடபகுதியில் வாழ்ந்த சர்வதேச அங்கீகாரம் பெற்ற, பிரசித்திபெற்ற மனிதராக பார்க்ளே திகழ்ந்தார். 1978 இல் அவர் மரணமடைந்தார் பார்க்ளேயின் நூல்கள் இன்றும் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.

### 'கிறிஸ்தவ உலகின் மிக பயங்கரமான மனிதன்'

வில்லியம் பார்க்ளே எதை விசுவாசித்தார்? அவர் வரலாற்றுச்

சம்பவமான ஆதாம், ஏவாளின் தோற்றம், ஆதாமின் பாவம், வீழ்ச்சி ஆகியவற்றை மட்டுமல்லாது கடவுள் இஸ்ரவேலருக்கு முன் செங்கடலைப் பிரித்து செய்த அற்புதம், யோனாவின் வரலாற்று நிகழ்ச்சி ஆகியவற்றையும் நம்ப முடியாதவை என்று நிராகரித்தார். பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களையும் மோசே எழுதினார் என்பதையும் நம்ப மறுத்தார். கிறிஸ்து இயேசுவின் அற்புதங்களின் தெய்வீகத் தன்மையையும் அவர் மறுதளித்தார். கிறிஸ்தவத்தின் அடிப்படை அம்சங்கள் அனைத்தையும் அவர் நம்ப மறுத்து அவற்றிற்கு மறுவிளக்க மளித்தார். அதேவேளை சுவிஷேசத்தைப் போதிக்கும் ஊழியக்காரர்களைத் தயார் செய்யும் பெரும் பொறுப்பையும் சுமந்து, தனது மனக்குழப்பங்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் வெளிப்படுத்தும் கைங்கரியத்தையும் செய்து வந்தார். இங்கிலாந்தில் இந்நூற்றாண்டின் மிகப் பெரும் பிரசங்கியாகவிருந்த டாக்டர் மார்டின் லாயிட் ஜோன்ஸ், பார்க்ளேயைப் பற்றிக் கூரும்போது "கிறிஸ்தவ உலகின் மிக ஆபத்தான மனிதன்"[1] என்று குறிப்பிட்டுள்ளார். பீட்டர் பார்ன்ஸ் என்பவர், "புல்ட்மான் (Bultman) ஆயிரக்கணக்கானவர்களை அழித்திருந்தால், பார்க்ளே பத்தாயிரக்கணக்கானவர்களை அழித்தார்" என்று குறிப்பிட்டார்.

இவர்கள் பார்க்ளேயின் எழுத்துக்களின் அடிப்படையிலேயே இவ்வாறு கூறினார்கள். பார்க்ளே எதை விசுவாசித்தார் என்று கீழ் வருவன விளக்குகின்றன:

**1. கடவுளின் தன்மை** - கடவுள் சர்வ அதிகாரத்தையும் கொண்டு இறைமையுடன் அனைத்தையும் ஆண்டு தனது சித்தத்தின்படி எல்லாவற்றையும் செய்பவரல்ல. "கடவுளுக்கு எனது துணை தேவை"[2] வருத்த துன்பங்களை நாம் அனுபவிக்க வேண்டுமென்பது கடவுளின் சித்தமல்ல. அவ்வாறு எண்ணுவது கடவுள் நிந்தனை என்று பார்க்ளே நம்பினார்.

**2. கிறிஸ்துவின் தன்மை** - "கிறிஸ்துவில் நான் கடவுளைக் காண்கிறேன்"[3] என்று குறிப்பிட்ட பார்க்ளே, "கிறிஸ்து கடவுளல்ல"[4] என்றும் போதித்தார். பார்க்ளே கிறிஸ்துவை, கடவுளால் தனது மகனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சாதாரண நல்ல மனிதனாகவே கருதினார்[5].

**3. கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு** - இதைப் பற்றி விளக்கும் பார்க்ளே, நாம் கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பை வரலாற்று உண்மையாக எண்ணக் கூடாது. "கடவுள் கிறிஸ்துவிடம் கொண்டிருந்த விஷேடமான உறவை விளக்கும் ஒரு உவமையாக, அவ்வுறவின் ஒரு பகுதியை விளக்கும் அடையாளப் படமாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"[6] என்று குறிப்பிட்டார்.

**4. சிலுவை** - சிறுவனாகவிருந்த போது பார்க்ளே, கிறிஸ்து, கடவுளின் கோபத்தைத் தன்மீது சுமந்து, தன்னை விசுவாசிக்கும் அனைவருக்குமான பாவநிவாரணியாக சிலுவையில் மரித்ததை விசுவாசித்தார். ஆனால் பின்பு இதையும் பார்க்ளே நிராகரித்தார். "கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் கடவுள் எத்தகையவர் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். கடவுளைப்பற்றிய மனிதனின் எண்ணங்களை மாற்றுவதற்காக கிறிஸ்து வந்தார் என்று அது போதிக்கவில்லை"[7] என்று பார்க்ளே குறிப்பிட்டார்.

**வில்லியம் பார்க்ளேயைப் பற்றிக் கேள்விப்படாத கிறிஸ்தவர்கள் குறைவு. ஒரு மனிதனின் பிரபல்யம், எழுத்து வன்மை, தாலந்துகள் எந்தளவுக்கு சமுதாயத்திற்கு தீமை செய்ய முடியுமென்பதற்கு பார்க்ளே ஒரு நல்ல உதாரணம். வேதத்தின் அடிப்படைப் போதனைகள் அனைத்தையும் நிராகரித்த பாரக்ளேயின் எழுத்துக்கள் கிறிஸ்தவ சமுதாயத்தின் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது என்றால் அது கிறிஸ்தவத்திற்கே மிகவும் ஆபத்தான ஒரு செய்தி. பார்க்ளே விசுவாசித்ததுதான் என்ன? என்பதை விளக்குகிறார் இக் கட்டுரை ஆசிரியர்.**

**5. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்** - இதையும் பார்க்ளே விட்டு வைக்கவில்லை. கிறிஸ்துவின் கல்லறையைப் பற்றிக் குறிப்பிடும் போது, "கிறிஸ்துவின் மீது அன்பு செலுத்தும் அனைவருக்கும் அவரை உடைமையாக்கும் விதத்தில் ஏதோவொன்று இங்கு நிகழ்ந்திருக்கின்றது."[8] என்று மட்டுமே பார்க்ளேயால் குறிப்பிட முடிந்தது.

**6. பரிசுத்த ஆவியின் தெய்வீகம்** - திரித்துவத்தை மறுதளிக்கும் கடவுளை அறியாதவர்களுடைய போதனைகளைப் பிரதிபலித்தே பரிசுத்த ஆவியைப்பற்றிய பார்க்ளேயின் விளக்கம் அமைந்திருந்தது.

**7. கீழ்ப்படியாதவர்களின் இறுதி முடிவு** - மனிதரனைவரும் நிச்சயமாக பரலோகம் செல்வார்கள் என்ற 'யூனிவர்சலிசக்' கோட்பாட்டில் பார்களே உறுதியாகவிருந்தார்.[9] பார்க்ளே தான் ஒரு யுனிவர்சலிஸ்ட் என்று வலியுறுத்திக் கூறினார்.

பார்க்ளே பேசிய இடங்களில் அவரது கருத்துக்களை எவராவது எதிர்த்துப் பேசியிருந்தால் ஒருவரும் ஆதரித்திருக்க மாட்டார்கள். ஏனெனில் அநேகர் பார்க்ளேயை பிரபல்யமான, நகைச்சுவை ததும்பப் பேசும் வல்ல பேச்சாளராகக் கருதினர். அதுமட்டுமல்லாது அவரது கருத்துக்கள் சரியானவை என்றும் வேதம் பல தவறுகள் அடங்கிய ஒரு நூல் என்றும் கருதினர். இருந்தபோதும் பார்க்ளேயின் போலிப் போதனைகள் கிறிஸ்துவின் பெயருக்கு ஏற்படுத்திய கலங்கத்தை குறித்து மெய்க்கிறிஸ்தவர்கள் வருந்தினர். இதை பார்க்ளேயால் என்றுமே புரிந்து கொள்ள முடியவில்லை. "ஒரு மனிதனின் நம்பிக்கைகளை நான் என்றுமே சாடமாட்டேன். ஆனால், நான் அவனுக்குக் காட்டும் அனுதாபத்தை அவன் எனக்குக் காட்ட மறுத்தால் அதைத் தவறாகக் கருதுவேன்."[10] என்று பார்க்ளே கூறினார்.

ஒருமுறை கிறிஸ்தவ உலகிற்கும், சுவிஷேச ஊழியத்திற்கும் தான் செய்த சேவையைப் பாராட்டி அளிக்கப்படவிருந்த விருதைப் பெற்றுக்கொள்ளச் சென்ற பார்க்ளே 'போலிப்போதகன்', 'சுவிஷேசத்தின் எதிரி' என்ற அடையாள அட்டைகளைத் தாங்கித் தன்னை வரவேற்ற ஒரு கூட்டத்தாரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களுடைய நோக்கத்தைத் தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறிய பார்க்ளே அவர்களுக்குக் கைகொடுத்தால் சமாதானப்படுவார்கள் என்று கருதி கூட்டத்தை அனுகினார். தனது கரங்களை நீட்டி, 'மாறுபாடான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும்

நாமனைவரும் கர்த்தரின் பக்கமே' என்று கூறிய பார்க்ளேயின் கரங்களை ஒருவருமே குலுக்க வில்லை. அடையாள அட்டைகளைத் தாங்கி எதிர்ப்பைக் காட்டுவது தவறோ இல்லையோ, பார்க்ளேயின் முரண்பட்ட கருத்துக்கள் மெய்யான கிறிஸ்தவ ஐக்கியத்திற்குத் தடையாக இருந்தன.

பார்க்ளேயின் மரணத்திற்குப் பின்பு அவரைப் போலப் பிரபல்யமடைந்தவர்கள் ஒருவருமேயில்லை. அவரைப் போல எழுத முனைந்து பழைய ஏற்பாட்டிற்கு விளக்கவுரை எழுதிய எத்தனையோ பேர் பெயர் அடையவில்லை. இருந்தாலும் வேதத்தில் பரிச்சயமில்லாதவர்களைப் பாதிக்கும் போலிப்போதனைகளின் வல்லமையை எவரும் சாதாரணமான

**வல்லமையற்ற போலிச் சமயத்தை வார்த்தை ஜாலங்களோடு, மற்றவர்களைக் கவரக்கூடிய விதத்தில் போதித்தால் கோடிக்கணக்கானவர்கள் அதன் கவர்ச்சிக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டு அதனால் பாதிக்கப் படுவார்கள்.**

தாகத் தவறாக எடைபோட்டுவிடக் கூடாது. வல்லமையற்ற போலிச் சமயத்தை வார்த்தை ஜாலங்களோடு, மற்றவர்களைக் கவரக்கூடிய விதத்தில் போதித்தால் கோடிக்கணக்கானவர்கள் அதன் கவர்ச்சிக்கு உட்படுவது மட்டுமன்றி அதனால் பாதிக்கப்படுவார்கள். பார்க்ளே இதற்கு ஒரு சரியான உதாரணம்.

(இக்கட்டுரையின் ஆசிரியரான, ஜெப்ரி தொமஸ், வேல்ஸில் ஒரு திருச்சபைப் போதகராகப் பணியாற்றுகிறார். இக்கட்டுரை முதலில் 'இவெஞ்சலிக்கள் டைம்ஸ்ஸில்' வெளிவந்தது.)

Foot notes:

1. William Barclay: *the authorised biography*, p 651, Rawlins.
2. Testament of Faith, pp, 112, 115.
3. ibid. p.49
4. ibid. p.49
5. *The authorized biography*, pp.376-383.
6. Rawlins, p.547.
7. *Testament of Faith*, p.52
8. ibid. p.108.
9. ibid. p.58, 59.
10. ibid. p. 30.

# அடுத்த பக்கக் கட்டுரை அறிமுகம்:

ஜோன் ஓவன் என்ற தூய்மைவாதி 'கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு' என்ற தலைப்பில் கிறிஸ்து யாருக்காக மரித்தார் என்று விளக்கி எழுதிய காலத்தால் அழியாத பிரபல்யமான நூலுக்கு ஜே. ஐ. பெக்கர் என்பவர் எழுதிய முன்னுரையின் தமிழாக்கத்தை இங்கே தந்துள்ளோம். இம்முன்னுரையை 'பெனர் ஆப் டுருத்' இன் ஆங்கில வெளியீட்டில் காணலாம். பதினாறு வருடங்களுக்கு முன் முதன் முறையாக இதை நான் வாசித்தபோது எப்படியாவது இதனைத் தமிழில் வெளியிட்டுப் பலரும் வாசித்துப் பயனடையச் செய்ய வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. பல தடைகளினால் அது வெறும் ஆவலாக மட்டுமே என் மனதில் ஒரு ஓரத்தில் குடியிருந்தது. ஒரு வருடத்திற்கு முன் இதைத் தமிழாக்கம் செய்த சகோதரன் ஸ்ரீதரனை நான் சந்திக்க நேர்ந்தது. நான் ஏதாவது பத்திரிகைக்கு செய்ய வேண்டுமானால் கூறுங்கள் என்று அவர் கேட்டபோது என் மனதில் எங்கோ குடியிருந்த அந்தப் பழைய ஆவல் மறு உருப்பெற்று நிழலாடியது. உடனடியாக இதனைத் தமிழில் வடிக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். அத்தமிழ் மொழிபெயர்ப்பு இலக்கணச் சுத்தமாகவும், வழக்குத் தமிழில் அமையுமாறும் ஆங்காங்கு தேவையான மாற்றங்களை மட்டும் நான் செய்துள்ளேன். அதன் பலனைத்தான் இங்கே காண்கிறீர்கள்.

இதன் மூல ஆசிரியரைப் பற்றி ஒரு வார்த்தை. பெக்கருக்குத் தூய்மைவாதிகளின் எழுத்துக்களில் நல்ல பரிச்சயமுண்டு. துல்லிதமாகவும், தெளிவாகவும் ஓவனின் நூலுக்கு அவர் விளக்கமளித்துள்ளார். இது ஓவனின் நூலுக்கு மட்டும் முன்னுரையாக அமையாமல் 'கிருபையின் கோட்பாடுகளை' எடுத்து விளக்கும் அருமையான எழுத்தோவியமாகவும் உள்ளது. பெக்கரின் சமய சமரசம் பற்றிய சமீப கால கருத்துக்களில் எமக்கு உடன்பாடில்லை. இருந்தபோதும் 1954 இல் அவர் எழுதிய இம்முன்னுரை திருமறையின் அடிப்படையில் அமைந்து, இதைவிட அருமையாக எவரும் எழுத முடியுமா என்ற வினாவைத் தொடர்ந்து எழுப்புகின்றது. பலரும் இம்முன்னுரையை வாசித்துக் கர்த்தரின் சர்வ ஏகாதிபத்தியத்தையும், கிறிஸ்துவின் மரணத்தின் மாட்சியையும் சரிவரப்புரிந்து கொண்டு தங்களது கிறிஸ்தவ வாழ்க்கையில் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை மன்றாடுகிறோம்.

இது அவசரமாக வாசித்துப் புரிந்து கொள்ளக்கூடிய கட்டுரை அல்ல. நேரமெடுத்து பொறுமையாக வாசித்து சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டிய கட்டுரை. பலருக்கு சில விடயங்கள் புதிதாக இருக்கலாம். ஆனால் அவற்றையும் அறிந்து வளர வேண்டியது நமது கடமைதானே. ஆகவே ஜெபத்தோடு கர்த்தரின் ஆசீர்வாதத்தை நாடி இதனை வாசியுங்கள். மாறான கருத்துக்களை நீங்கள் கொண்டிருந்தாலும் ஓவனின் வேதபூர்வமான வாதங்களை ஆராய்ந்து பாருங்கள். ஓவனின் நூலான 'மரணத்தினால் உண்டாகும் வாழ்வு' தமிழில் சுருக்கமான சிறுநூலாக வெளியிடப்பட்டுள்ளது. திருமறைத்தீபத்தில் இதைப் பற்றிய நூல் விமர்சனத்தை ஏற்கனவே தந்துள்ளோம். இக்கட்டுரை ஓவனின் நூலை வாசிக்க உங்களை நிச்சயமாகத் தூண்டும் என்பதில் எமக்குச் சந்தேகமேயில்லை. இதனைத் தமிழில் வெளியிட அனுமதி வழங்கிய 'பேனர் ஆப் டுருத்' வெளியீட்டாளருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்

கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு

# கிருபையின் கோட்பாடுகள்

## “ஓர் அறிமுகம்”

**- ஜோன் ஓவனின் நூலுக்கு வழங்கப்பட்ட முன்னுரை -**

*அத்தியாயம் 1*

மனித குலமனைத்தையும் மீட்க கிறிஸ்து மரித்தார் என்ற கொள்கை வேதாகமத்திற்குப் புறம்பானது, சுவிஷேசத்தின் அழிவை நாடுவது என்பதை எடுத்துக்காட்ட ஆய்வு பூர்வமாக எழுதப்பட்டதே ‘கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு’ என்ற சர்ச்சைக்குரிய நூல். எனவே அநேகருக்கு இந்நூல் ஆர்வம் தரக்கூடியதொன்றாகக் காணப்படாது. முறையான கோட்பாடுகளின் அவசியத்தை உணராதவர்களும், சுவிஷேசக் கோட்பாட்டாளர்கள் மத்தியில் பிரிவினகளை எடுத்துக் காண்பிக்கும் இறையியல் விவாதங்களுக்கு நேரமில்லை என்பவர்களும் இந்நூலின் மறுபதிப்பினைக் கண்டு நொந்து போவார்கள். வேறு சிலர் ஓவனின் ஆணித்தரமான ஆய்வினைக் கண்டு அதிர்ச்சியுற்று அதைப் படிக்கக் கூடாது என்று நிராகரிப்பர். இருப்பினும் இந் நூலின் மறுபதிப்பு இத்தகைய நோக்கங்களைக் கொண்டிராத அநேகர் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கிறோம். விசுவாசத்தின் மூலமாக சிந்தித்து பாரம்பரியங்களை சோதித்தறிவதற்கான ஒரு ஆயத்த நிலை மற்றும் வேதத்தை ஆராய்ந்தறிதல் போன்ற ஒரு புதிய இறையியல் ஆர்வம் பெருகிவருவதற்கான அடையாளங்களை இன்று பலர் மத்தியில் காண முடிகின்றது. இன்று சுவிஷேசக் கிறிஸ்தவ உலகின் முன்னுள்ள மிக முக்கிய பொறுப்பு சுவிஷேசத்திற்கு உயிரளிப்பதாகும். இதற்குக் தயாரானவர்களுக்காகவே ஓவனின் நூல் வெளியிடப்படுகின்றது.

இந்த இறுதிக் கருத்து ஒரு சிலரின் புருவங்கள் உயரும் அளவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தினாலும் அக்கூற்று உண்மைகளினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இன்றைய சுவிஷேசக் கோட்பாடு இன்னும் விவாதங்களுக்கு இடந்தரக்கூடிய குழம்பிய நிலையில் உள்ளது என்பதில் ஐயமில்லை.

**விசுவாசத்தின் மூலமாக சிந்தித்து பாரம்பரியங்களை சோதித்தறிவதற்கான ஒரு ஆயத்த நிலை, மற்றும் வேதத்தை ஆராய்ந்தறிதல், போன்ற ஒரு புதிய இறையியல் ஆர்வம் பெருகிவருவதற்கான அடையாளங்களை இன்று பலர் மத்தியில் காண முடிகின்றது.**

சுவிஷேச ஊழியம், பரிசுத்த வாழ்வைக் குறித்த போதனை, உள்ளூர் சபையைக் கட்டியெழுப்புதல், போதகர்கள் ஆத்துமாக்களை வளர்க்கும் முறை, சபை ஒழுங்கைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றில் பரவலான அதிருப்தி காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இவற்றின் எதிர்காலத்தைப் பற்றிய சந்தேகமும் பரவலாகக் காணப்படுகின்றது. இச்சிக்கலான பிரச்சனைக்கு அநேக காரணங்கள் உண்டு. ஆனால் இவற்றிற்கான நேரடிக் காரணிகளை ஆராய்ந்து பார்த்தால் சுவிஷேத்தின் பிடியை நாம் இழந்து நிற்பதே மூல காரணம் என்பதைக் கண்டுணரலாம். இதை நாம் உணராமல் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக வேறு ஒரு பதில் பொருளை சுவிஷேசத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தி வந்துள்ளோம். இது பார்வைக்கு ஒரு சில விடயங்களில் திருமறையின் அடிப்படையிலான சுவிசேசத்திற்கு ஒத்ததாகக் காணப்பட்டாலும் உண்மையில் ஒட்டு மொத்தமாக வேறுபட்டதொன்றாகும். இதனால்தான் இன்று இத்தனைக் குளறுபடிகளும் ஏற்பட்டுள்ளன. ஏனெனில் அதிகார பூர்வமான சுவிஷேசம் கடந்த காலங்களில் அதிவல்லமை மிக்கதானதாக நிரூபித்து வந்துள்ளதைப் போல இப்பதில் பொருளால் பலவிடயங்களுக்கு விடைகாண முடியவில்லை. இப்புதிய சுவிஷேசமானது வெளிப்படையாக ஒரு ஆழமான பயபக்தியையோ, மெய்யான மனந்திரும்புதலையோ, நல்ல தாழ்மையையோ, ஆராதிக்கக்கூடிய சிந்தையையோ, சபையைக் குறித்த அக்கறையையோ எற்படுத்தத் தவறியுள்ளது. ஏன்? இதற்கான காரணம் அதன் தன்மையிலும் பொருளிலுமே தங்கியுள்ளது என்று நாம் கருதுகிறோம். இந்தப்புதிய சுவிஷேசம், மனிதர்களைத் தேவனை மையமாகக் கொண்டு தெய்வ பயத்துடன் வாழ்பவர்களாக மாற்றத் தவறுகிறது. ஏனெனில் இதன் பிரதான நோக்கமே அதுவல்ல. இதற்கும் திருமறையின் அடிப்படையிலான சுவிஷேசத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைப் பின்வறுமாறு கூறலாம். புதிய சுவிஷேசம் மனிதனுக்குத் துணை செய்வதையே பெரு நோக்கமாகக் கொண்டு அவனுக்கு சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், திருப்தியையும் கொடுப்பதில் மட்டுமே குறியாக இருக்கிறதேயல்லாமல் தேவனை மகிமைப் படுத்துகிறதில்

சிறிதளவே அக்கறை காட்டுகிறது. ஆனால் பழைய சுவிஷேசம் புதிய சுவிஷேசத்தைவிட மனிதனுக்கு உதவக்கூடியதாக இருந்தபோதும் அதன் பிரதான நோக்கம் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே. நியாயத்தீர்ப்பிலும், இரக்கத்திலும் தேவனுடைய தெய்வீக சர்வ ஏகாதி பத்தியத்தை பறைசாற்றவும், மனிதன் அனைத்திற்கும் தான் சார்ந்திருக்கின்ற கர்த்தருக்கு சிரம் தாழ்த்தி அவரை ஆராதிக்குமாறும் பழைய சுவிஷேசம் கட்டளையிடுகிறது. பழைய சுவிஷே சத்தின் மையமாக சந்தேகத்திற்கிட மில்லாமல் கர்த்தரே இருக்கின்றார். ஆனால் புதிய சுவிஷேசத்தின் மையப் பொருளாக மனிதனே இருக்கின்றான். பழைய சுவிஷேசம் திருமறை பூர்வ மாக அமைந்திருப்பதைப்போல் புதிய சுவிஷேசம் காணப்படவில்லை. பழைய சுவிஷேசத்தின் தலையாய நோக்கம் மனிதர்கள் கடவுளை ஆரா திக்கும்படிச் செய்வதாயிருக்கிறது. ஆனால் புதிய சுவிஷேசமோ அவர் கள் தாங்கள் எவ்வளவு நல்லவர்கள் என்று திருப்திப்பட்டுக் கொள்ளும் படிச் செய்வதிலேயே கருத்தாக இருக் கின்றது. பழைய சுவிஷேசம் கடவு ளையும் மனிதருடனான அவரது வழிமுறைகளையும் பற்றிப் பேசுகின் றது. ஆனால் புதிய சுவிஷேசமோ மனிதனைச் சார்ந்ததாகவும், தேவன் அவனுக்கு அளிக்கும் உதவியையுமே வற்புறுத்துகின்றது. இரண்டிற்குமிடை யில் உலகளவு வித்தியாசமுண்டு. சுவிஷசப் பிரசங்கத்தின் தன்மை, அதன் செய்தி அனைத்துமே இதனால் முற்றிலும் மாறியுள்ளது.

மனிதனுக்குத் துணைபுரிய வேண்டும் என்ற ஒரே ஆர்வத்தினால் புதிய சுவிஷேசம் திருமறையின் போதனையை முழுமையாக மாற்றி அமைத்திருக்கின்றது. அதன் விளை வாக இயற்கை சுபாவப்படி மனித னின் விசுவாசிக்க முடியாத இயலாமையையும், இரட்சிப்பிற்குத் தேவனின் சுயமான தெரிந்தெடுப்பே மூல காரணமாக உள்ளதென்பதையும், கிறிஸ்து தனது ஆடுகளுக்காக மட்டுமே குறிப்பாக மரித்தார் என்ப தையும், அது போதிக்கத் தவறியது. இப்போதனைகள் மனிதனுக்கு உதவக் கூடியனவாக இல்லை எனவும், தமது சொந்த பலத்தினால் கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்பட முடியாது என்று கூறுவது மனிதனை பரிதாப மான ஒரு நிலைக்குத் தள்ளுவதாக அமையும் என்றும் கூறப்பட்டது. இதனால் சுவிஷேசத்தின் பல போதனைகள் தவிர்க்கப்பட்டு சுவிஷே சம் என்ற பெயரில் அதன் ஒரு பகுதி மட்டுமே பிரசங்கிக்கப்படுகின்றது. பாதி உண்மை முழுமையானதாகப் பொய்த் தோற்றமளிக்கும்போது அது முழுப் பொய்யாக மாறிவிடுகின்றது. இதனால்தான் எல்லா மனிதர்களும் தமது சுய பலத்தால் எந்த நேரத்திலும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்ற விதத்தில் அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கப்படுவதையும், கிறிஸ்துவின் மரணத்தின் அடிப் படையில் நமது விசுவாசத்தின் மூலம் நம்மை நாமே இரட்சித்துக் கொள்வதற்காக மட்டுமே கிறிஸ்து மரித்தார் என்ற விதத்தில் அவரது மீட்புப்பணி பேசப்படுவதையும், தம்மை விசுவாசிக்கும் எவரையும் தம்மிடம் அழைத்துக் கொள்ளும் கடவுளின் பொதுவான விருப்பமாக அவரது அன்பைக் கருதுவதும், பிதாவும், குமாரனும் பாவிகளைத் தம்மண்டையில் சர்வ வல்லமை யோடு ஈர்க்கச் செயல்படுகின்றார்கள்

**பாதி உண்மை முழுமையானதாகப் பொய்த் தோற்றமளிக்கும் போது அது முழுப் பொய்யாக மாறிவிடுகின்றது.**

என்பதை நிராகரித்து, அவர்கள் ஆற்றலற்ற நிலையில் நமது இருதயக் கதவுகளை நாம் திறந்தால் மட்டுமே உட்புக முடியும் என்ற நிலையில் காத்திருப்பது போலவும் சித்தரித்துப் பேசப்படுவதைப் பார்கிறோம். இன்று இவ்வாறே நாம் பிரசங்கிக்கிறோம் என்பதை எம்மால் மறுக்க முடியாது. இதைத் தான் நாம் உண்மையில் நம்புகிறோம். ஆனால் இந்தத் திரிபுபடுத்தப்பட்ட அரைகுறையான உண்மைகள் திருமறையின் அடிப் படையிலான சுவிஷேசம் அல்ல என்பதை நிச்சயமாகக் நாம் வற்புறுத்திக் கூறத்தான் வேண்டும். இவ்விதமாக போதிக்கும்போது திருமறை நமக்கு எதிராக இருக் கின்றது. இவ்விதமான போதனைகள் இன்று சாதாரணமாக எங்கும் வழக்கில் இருப்பது நாம் எவ்வளவு தூரம் இவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இன்றைய அதிமுக்கிய தேவை என்னவெனில், அதிகார பூர்வமான, திருமறையின் அடிப் படையிலான பழைய சுவிஷேசத்தைத் திரும்பப் பெற்று எமது பிரசங்கத் தையும், நடைமுறை வழக்கங்களையும் அதனோடு தொடர்புடையதாக இருக்கும்படிச் செய்ய வேண்டியது தான். இங்குதான் ஜோன் ஓவனின் மீட்பைப் பற்றிய இவ்வரிய ஆக்கம் நமக்குப் பெருந்துணை புரிகின்றது.

## அதிகாரம் 2

ஒரு சிலர் ''கொஞ்சம் பொறுங்கள் ஐயா! இது போன்று சுவிஷேசத்தைப் பற்றிப் பேசுவ தெல்லாம் நன்றாகத்தானிருக்கின்றது. ஆனால் ஓவன் தன்னுடைய நூலில் கல்வினீயத்தின் ஐந்து கோட்பாடு களில் ஒன்றான 'வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தம்' (Limited Atonement) என்னும் கொள்கையைப் பாதுகாக்கத் தான் பேசுகிறார் என்பது நிச்சயம். அப்படியிருக்க திருமறை பூர்வமான சுவிஷேசத்தை மீளப்பெறுவது குறித்து தாங்கள் பேசுவது எங்களையும் கல்வினுடைய கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ள அழைப்பது போலல்லவா இருக்கின்றது?" என்று சொல்லக் கூடும்.

இத்தகைய கேள்விகளை நிச்ச யம் கருத்தில் கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் இத்தகைய கேள்விகள் பலரது உள்ளத்திலும் எழுகின்றன என்பதில் சந்தேமில்லை. அதேநேரம் இவ்வாறான கேள்விகள் அறியாமையையும், தவறான அபிப் பிராயங்களையுமே பிரதிபலிக்கின்றன. “வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தம்” - சுவிஷேசத்தின் மையக்கருத்தை எடுத்துரைக்க விரும்பும் ஒரு சீர்திருத்த இறையியலாளன் செய்வ தெல்லாம் இக்கோட்பாட்டைப்பற்றிப் பேசுவது மட்டும்தானா? “நாங்களும் கல்வினுடைய கொள் கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?” என்ற கேள்வியைப் பார்க்கும் போது, சீர்திருத்த இறையியலாளருக்கு தங்களுடைய குழுவுக்கு ஆள் சேர்ப்பதைவிட வேறு தொழில் இல்லை என்பது போலவும், கல்வினு டைய கொள்கையை ஏற்றுக் கொள் வது என்பது ஒருவர் தமது இறையியற் கோட்பாடுகளை இழப்பதன் கடைசி நிலை என்பது போலவும், கல்வினு டைய கொள்கைக்கும் சுவிஷேசத்திற் கும் எந்தவிதத் தொடர்புமே இல்லாதது போலவும் எண்ணுவது போலல்லவா இருக்கின்றது? இவ்வா றான கேள்விகளுக்கு நேரடியாக

பதிலளிக்குமுன் இவற்றிற்குப் பின்னனியில் உள்ள தப்பபிப்பிராயங்களை நீக்கும் வகையில் முதலில், உண்மையில் கல்வினிசம் என்றால் என்ன என்று தெளிவாக நாம் விளக்க வேண்டியது அவசியம். ஆகவே, கவ்வினிசம், பற்றிய பொதுவான வரலாற்று, இறையியல் பூர்வமான உண்மைகளை, குறிப்பாக ஐங்கோட்பாடுகளை வாசகர்கள் கருத்தில் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முதலாவதாக, கல்வினிசத்தின் ஐங்கோட்பாடுகள் என்பது பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ''பெல்ஜிக்-செமி பெலேஜியன்'' என்றழைக்கப்பட்ட சிலரால் போதிக்கப்பட்ட ஐங்கோட்பாடுகளுக்கு எதிராகக் கொடுக்கப்பட்ட திருமறை பூர்வமான விளக்கம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வரலாற்றினால் "ஆர்மீனியனிசம்'' என்று அறியப்பட்ட இறையியலானது கீழ்வரும் இரண்டு தத்துவக் கொள்கைகளிலிருந்து தோன்றியதாகும். முதலாவது, தெய்வீக சர்வ ஏகாதிபத்தியம் மனித சுதந்திரத்தோடு ஒத்துப் போகக் கூடிதொன்றல்ல, ஆகவே மனிதனுடைய பொறுப்புணர்விற்கு எதிரானது. இரண்டாவது, இந்தத் தெய்வீக சர்வ ஏகாதிபத்தியம் மனிதனுடைய கடமையுணர்வைக் கட்டுப்படுத்துகிறது. இந்த இரண்டு அனுமானங்களையும் ஆர்மீனியர்கள் முன் வைத்தனர். இவ்விரண்டிலிருந்தும் ஆர்மீனியர்கள் மேலும் இரு காரியங்களை அனுமானித்தனர். முதலாவது, வேதம், விசுவாசத்தை சுயாதீனமானதும், பொறுப்புணர்வுடைய மனித நடவடிக்கையாகவும் கருதுவதால் அது கடவுளால் உண்டாக்கப்படுவதாகக் கொள்ள முடியாது. ஆகவே விசுவாசம் என்பது கடவுளுடைய தொடர்பில்லாமல் மனிதனால் சுயமாகத் தன்னிச்சையாக செய்யப்படுவதொன்றாகும். இரண்டாவதாக, வேதம் விசுவாசத்தை சுவிஷேசத்தைக் கேட்கும் அனைவரதும் கடமையாகக் கருதுவதால், அனைவரும் விசுவாசிக்கும் ஆற்றல் உடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் போதித்தனர். இவற்றின் மூலம், திருமறை கீழ்வரும் நிலைமைகளைப் போதிப்பதாக விளக்கப்படல் வேண்டும் என்று சாதித்தனர்.

(1) சுவிஷேசம் அறிவிக்கப்படும்போது அதனை விசுவாசித்து இரட்சிக்கப்பட இயலாத அளவுக்கு மனிதன் பாவத்தினால் முற்றும் பாதிக்கப் படவில்லை.

(2) மேலும் மனிதன் சுவிஷேசத்தை நிராகரிக்கக்கூடாத அளவிற்கு ஒரு போதும் முழுவதும் கடவுளால் கட்டுப்படுத்தப்படவில்லை.

(3) எவரெல்லாம் சுவிஷேசத்தைத் தேவ உதவியின்றித் தாங்களாகவே விசுவாசிக்கக்கூடுமோ அத்தகையவர்கள் மட்டும் இரட்சிக்கப்படுவார்கள் என்பதைக் கடவுள் தமது முன்னறிவின் மூலம் கண்ணோக்கிப் பார்த்து அவர்களைத் தெரிந்து கொண்டார்.

(4) கிறிஸ்துவின் மரணமானது எவருடைய இரட்சிப்பையும் உறுதி செய்யவில்லை. ஏனெனில் அது எவருக்கும் விசுவாசமாகிய வரத்தைப் பெற்றுத் தரவில்லை. (அப்படி ஒரு வரமே கிடையாது). மாறாக அது விசுவாசிக்கும் எவரும் இரட்சிப்பை அடையக்கூடிய ஒரு வாய்ப்பை மட்டுமே ஏற்படுத்தியது.

(5) விசுவாசத்தைத் தொடர்ந்து காத்துக் கொள்வதன் மூலம் கிருபையின் நிலைக்குள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது விசுவாசிகளையே முழுதாகச் சார்ந்துள்ளது.

**ஆர்மீனியக் கோட்பாடானது மனிதனுடைய இரட்சிப்பு அவனிலேயே முழுமையாகத் தங்கியுள்ளதாகவும், இரட்சிப்புக்கேற்ற விசுவாசமும் ஆரம்பத்திலிருந்தே மனிதனது சொந்தக்கிரியை என்றும் விளக்குகின்றது.**

தவறுகிறவர்கள் வீழ்ந்து தங்களது இரட்சிப்பை இழக்கிறார்கள். இவ்வாறாக, ஆர்மீனியக் கோட்பாடானது மனிதனுடைய இரட்சிப்பு அவனிலேயே முழுமையாகத் தங்கியுள்ளதாகவும், இரட்சிப்புக்கேற்ற விசுவாசமும் ஆரம்பத்திலிருந்தே மனிதனது சொந்தக் கிரியை என்றும் விளக்குகின்றது.

இந்த இறையியல் கொள்கையைப் பற்றித் தீர்ப்பு வழங்க ***1618*** ஆம் ஆண்டு டோர்ட் என்ற நகரத்தில் சமயப்பேரவை ஒன்று கூடியது. அதில் இதற்கு வழங்கப்பட்ட பதிலுரையே "கல்வினீய ஐங்கோட்பாடு" என்று பெயர் பெற்றது. இவை "இரட்சிப்பு கர்த்தருடையது'' (யோவான் 2:9) என்னும் முற்றிலும் மாறுபட்ட, திருமறையின் அடிப்படையிலான போதனைகளில் இருந்து உருவானவை. இவற்றை சுருக்கமாக கீழ்வருமாறு விளக்கலாம்:

(1) பாவத்தில் வீழ்ந்த மனிதன் தன்னுடைய இயற்கைத் தன்மையில் எவ்வாறு வெளியில் இருந்து கொடுக்கப்படுகின்ற அனைத்துத் தூண்டுதல்களுக்கு மத்தியிலும் நியாயப்பிரமாணத்தை விசுவாசிக்க இயலாதவனாக இருக்கின்றானோ அதே போல் சுவிஷேசத்தை விசுவாசிப்பதற்கான அனைத்து ஆற்றலையும் இழந்து நிற்கிறான்.

(2) பாவிகள் கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்படும்படி விசுவாசம் அருளப்பட்டு, மகிமையை அடைவதற்கு தேவன் சுயாதீனமாக, சர்வ ஏகாதிபத்தியத்துடன் நிபந்தனை அற்ற முறையில் அவர்களைத் தெரிந்து கொள்ளுதலே கடவுளுடைய தெரிந்து கொள்ளுதலாகும்.

(3) தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் இரட்சிப்பைத்தான் கிறிஸ்துவின் மீட்புப்பணி இறுதியும் இலக்குமாகக் கொண்டுள்ளது.

(4) பரிசுத்த ஆவியானவர் பாவிகளை விசுவாசத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தை நிறைவேற்றும் கிரியையில் ஒருபோதும் தறுவதில்லை.

(5) விசுவாசிகள் மகிமையடையும் வரை வெல்ல முடியாத தேவ வல்லமையால் விசுவாசத்திலும், கிருபையிலும் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இந்த ஐந்து கோட்பாடுகளும் ஆங்கிலத்தில் ஞாபகக் குறியீடாக Tulip என்று அழைக்கப்படுகின்றது.

1. மனிதனது முழு வீழ்ச்சி - Total Depravity.
2. நிபந்தனையற்ற தெரிவு - Unconditional Election.
3. வரையறுக்கப்பட்ட பிராயச் சித்தம் - Limited Atonement.
4. நிராகரிக்க முடியாத அழைப்பு - Irresistable Grace.
5. பரிசுத்தவான்களின் பாதுகாப்பும், நித்திய மகிமையும் - Preservation of the saints.

இங்கே திருமறையின் சுவிஷேசத்தை விளக்க முனையும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் இரண்டுவிதமான வேதவிளக்கங்களைக் காண்கிறோம். இவை இரண்டிற்குமிடையில் உள்ள தலையாய வேற்றுமை அவை முதன்மைப் படுத்தும் போதனையில் இல்லாமல் அவற்றின் பொருளடக்கத்திலேயே காணப்படுகின்றது. ஒன்று இரட்சிக்கின்ற கடவுளைப் பறை சாற்றுகின்றது. மற்றொன்று மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள உதவி செய்கின்ற ஒரு தேவனைப் பற்றிப் பேசுகின்றது. ஒரு கருத்து இழந்து போன மனித குலத்தினை மீட்பதற்

கான திரித்துவ தேவனின் மூன்று பெரும் பணிகளான பிதாவின் தெரிந்தெடுப்பு, பரிசுத்த ஆவியான வரின் அழைப்பு, குமாரனின் மீட்பு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது. திரித்துவத் தேவனின் இச்செயல்கள் தெரிந்து கொள்ளப்பட்ட பாவிகளில் நேரடியாகக் கிரியை புரிந்து அவர் களுக்கு வழுவாத இரட்சிப்பைப் பெற்றுத் தருகின்றன. மற்ற கருத்து இம்மூன்று செயல்களைப் பற்றிய வித்தியாசமான விளக்கத்தைக் கொடுக்கின்றது. முழுமனுக்குலத்தை யும் மீட்பதே இரட்சிப்பின் நோக்க மென்றும், எவரெல்லாம் சுவிஷே சத்தைக் கேட்கிறார்களோ அவர் களுக்கே அழைப்பு என்றும், சுவிஷே சத்தை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு மட்டுமே தெரிந்தெடுப்பு என்றும் இக்கருத்து விளக்கம் கொடுக்கின்றது. அதுமட்டுமன்றி திரித்துவத்தின் இம்மூன்று கிரியைகளில் எதுவும் எந்த ஒரு மனிதனுக்கும் நிச்சயமாக இரட்சிப்பைப் பெற்றுத் தருவதில்லை என்றும் போதிக்கின்றது.

இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றி இவ்விரு இறையியல்களும் முற்றிலும் வித்தியாசமான கருத்தைத் தருகின்றன. ஒன்று இரட்சிப்பு தேவனுடைய செயலில் தங்கியுள்ளது என்றும், மற்றொன்று அது மனித செயலைச் சார்ந்தது என்றும்; ஒன்று விசுவாசத்தை இரட்சிக்கப்படும் படியாக மனிதருக்கு கடவுள் கொடுக்கும் ஈவாகவும், மற்றொன்றோ அதை இரட்சிப்பிற்கு மனிதனளிக்கும் பங்காகவும் கருதுகின்றது. ஒன்று அனைத்து விசுவாசிகளையும் இரட் சிக்கும் செயலின் மகிமையை கடவுளுக்கு அளிக்கும் பட்சத்தில் மற்றது அதனை கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் பங்கிடுகின் றது. இவ்வித்தியாசங்கள் மிக முக்கியமானவை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அத் தோடு இவ்வித்தியாசங்களை, எந்தெந் தப் பகுதிகளில் எந்தெந்தளவுக்கு வேறுபடுகின்றன என்று தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூறும் கல்வினிசத் தின் சாராம்சமான ஐங்கோட் பாட்டின் நிரந்தரமான தேவையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இருப்பினும் கல்வினுடைய கொள்கையை ஐங்கோட்பாட்டுடன் வெறுமனே சம்பந்தப்படுத்திக் காட்டுவது முறையல்ல. பின்வரும் நமது ஐந்து கருத்துக்களும் அதனைத் தெளிவுபடுத்தும்.

முதலாவதாக, கல்வினிசக் கோட்பாடுகள் ஐங்கோட்பாடுகள் சுட்டிக் காட்டுவதைப் பார்க்கிலும் விசாலமானது. முழு உலகத்தின் சிருஷ்டிகரராகவும், ராஜாவாகவும் கடவுளைக் காண்கிற ஒரு தெளிவான தரிசனத்திலிருந்து தோன்றியதே இந்த முழு உலகளாவிய கோட்பாடான கல்வினிசக் கோட்பாடாகும். தனது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்க தாக அனைத்தையும் செயல்படுத்துகிற கர்த்தாவாக சிருஷ்டிகரை அங்கீகரிக் கும் நிலைமாறாப் போதனையே கல்வினிசமாகும். முழு வாழ்க்கையும் கர்த்தரின் வார்த்தையின் வழி நடத்தலுக்கும், கட்டுப்பாட்டிற்கும் கீழானது என்று இறைவனை மையமாகக் கொண்டு சிந்திக்கும் வழிமுறையே கல்வினிசமாகும். வேறுவகையில் கூறப்போனால் திருமறையின் அடிப்படையில் வேதா கம இறையியலை நோக்கும் ஒரு போதனை கல்வினிசமாகும். அதாவது, எல்லாவற்றிலும் சிருஷ்டிகரை ஆதாரமாகவும், வழியாகவும், முடி வாகவும் நோக்குகிற - கடவுளை

**ஐங்கோட்பாடு தேவன் தனிமனிதரை மீட்பதில் சர்வ ஏகாதிபத்தியம் உடையவராக உள் ளார் என்று மட்டுமே கூறுகின்றது. ஆனால், கல்வினீயம் மேலும் பரந்த அளவில் அவரது சர்வ ஏகாதிபத்தியம் எங்குமுள்ளதாகப் பறைசாற்றுகிறது.**

மையமாகக் கொண்ட - ஒரு கோட்பாடு. கல்வினிசமானது இவ் வாறாக மிகத்தூய்மையாய் மேம்படுத் தப்பட்ட ஆத்திகமாகவும் (கடவு ளையே எல்லாவற்றிற்கும் மூல ஆதாரமாகக் கொள்வது), சமயமாக வும் (எல்லாவற்றையும் தந்தருளுகிற வரான தேவனை சார்ந்திருத்தல்), சுவிஷேசக் கோட்பாட்டியக்கமாகவும் (எல்லாவற்றிற்காகவும் கிறிஸ்துவின் மூலமாக தேவனை நம்புவது) இருக்கின்றது. கவ்வினிசம் என்பது, பிரபஞ்சத்தில் நடைபெறும் அனைத் துக் காரியங்களையும், நிகழ்ச்சிகளை யும் தனது படைப்புயிர்களுக்கும் சபைக்குமாக கடவுள் தனது மேலான முன்குறிக்கப்பட்ட திட்டத்தின் மூலமாக நிறைவேற்றிவரும் செயல்கள் என்பதைத் தெளிவாகக் காணும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வரலாற்றுத் தத்துவம். ஐங்கோட்பாடு தேவன் தனிமனிதரை மீட்பதில் சர்வ ஏகாதிபத்தியம் உடையவராக உள் ளார் என்று மட்டுமே கூறுகின்றது. ஆனால், கல்வினிசம் மேலும் பரந்த அளவில் அவரது சர்வ ஏகாதி பத்தியம் எங்குமுள்ளதாகப் பறை சாற்றுகிறது.

இரண்டாவதாக, ஐங்கோட் பாடு இரட்சிப்பைக் குறித்த கல்வினிசப் போதனைகளை எதிர் மறையாகவும், வாதத்திற்குரிய விதத் திலும் வழங்குகிறது. ஆனால் கல்வினிசமோ போதகத்தன்மை வாய்ந்ததும், தன்னில் விளக்கமும் தெளிவுமுடையதும், ஆக்கபூர்வமு மானது. ஆகவே, அதனால் ஆர்மீனி யக் கோட்பாடுகளின் துணையின்றி திருமறையின் அடிப்படையில் தனது நிலையை வரையறுத்துக் காட்ட முடிவதோடு, தன்னைக் காத்துக்கொள்வதற்கு நிஜமான அல்லது நிழலான ஆர்மீனிக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர் களோடு தொடர்ந்து மோதிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் அதற்கில்லை. எதிர்மறை வாதங்களில் கல்வினிசத்திற்கு ஆர்வமில்லை. மோத வேண்டிய வேளைகளில் அது சுவி ஷேசத்தின் நேர்மறையான கொள்கை களுக்காக மட்டுமே போராடுகின்றது. ஐங்கோட்பாட்டின் மூன்றாவது கோட்பாடான 'வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தம்' அல்லது 'குறிப்பிட்ட வர்களுக்கான மீட்பு' ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறது. இதன் 'வரையறுக்கப்பட்ட' என்ற அடைமொழியினால் கல்வினிசக் கோட்பாட்டாளருக்கு தெய்வீக இரக்கத்தை மட்டுப்படுத்துவதில் ஒரு விஷேட ஆர்வமிருப்பதாக பலரும் கருத இடமேற்பட்டு விடுகிறது. ஆனால், இச்சொற் தொடரின் நோக்கமோ, நாம் இனி விளக்கமாகப் பார்க்கப் போவதுபோல், கிறிஸ்து மெய்யாகவே மீட்கின்ற மீட்பர் என்ற சுவிஷேசத்தின் மையக் கோட்பாட் டைப் பாதுகாப்பதுதான். அவ்வாறே, நிபந்தனைக்குட்பட்ட தெரிவு மற்றும் நிராகரிக்கக்கூடிய கிருபை போன்ற போதனைகளை மறுப்பதற்குக் காரணம் கடவுள் இரட்சிக்கிறார் என்ற நேர்மறையான உண்மையைப் பாதுகாப்பதற்காகத்தான். ஆனால், உண்மையில் எதிர்மறையான கருத் துக்கள் தெரிந்தெடுப்பு, மீட்பு, அழைப்பு ஆகியவை கடவுளுடைய இரட்சிக்கும் செயல்கள் அல்ல என்ற ஆர்மீனியனிசப் போதனைதான். சுவிஷேசத்தின் நேர்மறையான நோக் கங்களை உறுதி செய்வதற்காகவும்,

விசுவாசத்தைப் பலப்படுத்தி, சபையைக் கட்டியெழுப்புவதற்காகவும் கல்வினீயம் இவ்வெதிர்மறைகளை நிராகரிக்கின்றது.

மூன்றாவதாக, கல்வினிசத்தின் இரட்சிப்பைக் குறித்த போதனைகளை இவ்வைந்து தனிப்பட்ட கோட்பாடுகளின் வடிவத்தில் விளக்க முனைவது இரட்சிப்பைக் குறித்த கல்வினிசத்தின் உயிரோட்டமுள்ள போதனையை இருட்டடிப்புச் செய்யும் போக்கில் உள்ளது. (ஏற்கனவே இருந்த ஐந்து ஆர்மீனியக் கோட்பாடுகளுக்கு டோர்ட் சமயக் குழு பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால்தான் ஐங்கோட்பாடுகளை முன்வைத்து விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது). ஏனெனில் இந்த ஐந்து கருத்துக்களும் தனித் தனியாக எடுத்துரைக்கப்பட்டிருப்பினும் உண்மையில் அவை ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளன. அவை ஒருங்கிணைந்து நிற்பவை; எல்லாவற்றையும் நிராகரிக்காமல் அவற்றில் ஒன்றை மட்டும் எவரும் நிராகரிக்க முடியாது. டோர்ட் சமயப் பேரவை இந்தப் பொருளில்தான் அவற்றை முன்வைத்தனர். கல்வினிசத்தின் இரட்சிப்பைக் குறித்த போதனைகளைப் பொறுத்த வரையில் உண்மையில் ஒரு கோட்பாடு மட்டுமே உண்டு: அதாவது 'கடவுள் பாவிகளை இரட்சிக்கிறார்' என்பதுதான். கடவுள் - பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரான மூன்று திரித்துவ அங்கத்தவர்களும் இறைமையுள்ள ஞானத்துடனும், வல்லமையுடனும், அன்புடனும் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களுக்கு இரட்சிப்பளிப்பதற்காக ஒருங்கிணைந்து செல்படுகிறார்கள். பிதா தெரிந்து கொள்கிறார்; குமாரன் பிதாவினுடைய சித்தத்தை மீட்புப் பணியின் மூலம் நிறைவேற்றுகிறார்; பிதா மற்றும் குமாரனுடைய நோக்கத்தை பரிசுத்த ஆவியானவர் புதுப்பிப்பதன் மூலம் செயல்படுத்துகிறார். பாவிகள் - அதாவது குற்றமுள்ள, இழிந்த, சகாயமற்ற, சக்தியற்ற, குருட்டாட்டமுள்ள, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவோ, தங்களது ஆவிக்குரிய பங்கை மேம்படுத்தவோ ஒரு விரலைக் கூட அசைக்கவோ திராணியற்ற மனிதர்களாகத் தேவனின் பார்வையில் காணப்படுகிறவர்கள். இரட்சிக்கிறார் - பாவத்தில் மரித்திருக்கும் மனிதனை மகிமையின் ஜீவிதத்திற்குக் கொண்டு வரல்; அதற்கான மீட்பினைத் திட்டமிட்டு, சாதித்து, வெளிப்படுத்தல்; அழைத்துப் பாதுகாத்தல், நீதிமானாக்குதல், பரிசுத்தமாக்கல், மகிமைப்படுத்தல் ஆகிய எல்லாக் காரியங்களையும் ஆரம்பம் முதல் கடைசிவரை செய்கிறார். "தேவன் பாவிகளை இரட்சிக்கிறார்" - என்ற அறிக்கையின் ஆற்றலை, திரித்துவத்தின் ஒருங்கிணைந்த செய்கையை இடையூறு செய்வதன் மூலமோ, அல்லது இரட்சிப்பின் நிறைவேறுதலை மனிதனுக்கும் கடவுளுக்குமிடையில் பங்கிட்டு இரட்சிப்பைத் தீர்மானிக்கும் பங்கை மனிதனுக்கு சொந்தமாக்குவதன் மூலமோ, அல்லது பாவிகளின் இயலாமையை மறைத்து இரட்சிப்பின் மகிமையை இரட்சகரோடு பகிர்ந்து கொள்ள அனுமதிப்பதன் மூலமோ பலவீனப்படுத்தக் கூடாது. ஐங்கோட்பாடுகள் நிலைநிறுத்த முயலும் கல்வினிச இரட்சிப்புப் போதனைகள் பற்றிய கீழ்வரும் ஒரே கருத்தையே ஆர்மீனியனிசம் முழுமுற்றாக எதிர்க்க முனைகிறது. அதாவது, பாவிகள் தங்களைத் தாமே எந்த விதத்திலும் இரட்சித்துக் கொள்ள முடியாது; ஆனால் இரட்சிப்பு முதலிலும் கடைசியிலும், நேற்றும் இன்றும் என்றும் முழுக்க முழுக்க கர்த்தருக்கே உரியது. அவருக்கே சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக! ஆமேன்.

**இந்த ஐந்து கருத்துக்களும் தனித்தனியாக எடுத்துரைக்கப்பட்டிருப்பினும் உண்மையில் அவை ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளன. அவை ஒருங்கிணைந்து நிற்பவை; எல்லாவற்றையும் நிராகரிக்காமல் அவற்றில் ஒன்றை மட்டும் நிராகரிக்க முடியாது.**

இது, ஐங்கோட்பாட்டு வாய்ப்பாடு கல்வினிசத்திற்கும் ஆர்மீனியனிசக் கோட்பாட்டிற்கும் இடையிலுள்ள ஆழமான வித்தியாசத்தை மறைக்கிறது என்ற நமது நான்காவது குறிப்புக்கு நம்மை இட்டுச் செல்கிறது. இவ்விடயத்தில் ஐங்கோட்பாடு பலர் மத்தியில் தவறான எண்ணங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஐங்கோட்பாட்டு வாய்ப்பாட்டில் அவற்றின் அடைமொழிகளே அழுத்தமாகப் பேசப்படுகின்றன. அதனால், கடவுளின் மூன்று இரட்சிக்கும் நடவடிக்கைகளைப் பற்றிய விவாதம் இவ்வடைமொழிகளைப் பற்றியது மட்டுமே என்ற ஒரு தவறான எண்ணத்தை இது ஏற்படுத்தி விடுகின்றது. கல்வினிச, ஆர்மீனியக் கோட்பாட்டாளர்கள் தெரிந்தெடுப்பு, மீட்பு, கிருபை ஆகியவற்றை ஏற்றுக் கொண்டாலும் அவைகளில் மனிதனது நிலை என்ன என்பதிலேயே மாறுபாடான கருத்தைக் கொண்டுள்ளனர். அதாவது, தெரிந்தெடுப்பு நிபந்தனைக்குரியதா? இல்லையா? என்பதிலும், மீட்பு அனைத்து மனிதர்களுக்கும் உரியதா? இல்லையா? என்பதிலும், தேவகிருபை மறுக்கப்படக்கூடியதா? இல்லையா? என்பதிலும் மட்டுமே மாறுபாடான கருத்தைக் கொண்டுள்ளனர். ஆகவே, கல்வினிசப் பிரச்சனை அதன் அடைமொழிகளைப் பற்றியதே என்று எண்ணுவது முற்றிலும் தவறாகும் அவை ஒவ்வொன்றின் பெயர்ச் சொற்களின் அர்த்தத்தை மாற்றிக் காண்பிப்பதற்காகவே அவற்றின் அடைமொழிகள் மாறியமைந்திருக்கின்றன. நிபந்தனைக்குரிய தெரிவு, அனைத்து மனிதர்களுக்குமான இரட்சிப்பு, நிராகரிக்கக்கூடிய கிருபை ஆகிய போதனைகள் கல்வினிசம் போதிக்கும் தெரிந்தெடுப்பு, மீட்பு, கிருபை ஆகிய போதனைகளைளைவிட மாறுபாடானவை. ஐங்கோட்பாட்டின் அடைமொழிகள் சரியானவையா? என்பதல்ல இங்கு பிரச்சனை, ஆனால் அவற்றின் பெயர்ச் சொற்கள் சரியான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளனவா என்பதுதான் முக்கியமான பிரச்சனை. முதன் முதலில் இதுபற்றிய சர்ச்சை ஆரம்பமானபோதே இரு சாராரும் இதைத் தெளிவாக அறிந்திருந்தனர். ஆகவே நாமும் இதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இல்லாவிடில் நமது கல்வினிச - ஆர்மீனியக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு எந்தவித நோக்கமுமற்றுப் போய்விடும். (அடுத்த இதழில் தொடரும்).

"சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக."

*ரோமர் 11:36*

# வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள்




கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெயிடில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்தொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மின்ஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையை' மறுபடியும் வெளியிட்டதோடு, திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார். இதனையே இங்கு தமிழில் விளக்கக் குறிப்புகளுடன் வழங்குகிறோம்.

*கேள்வி 29: கிறிஸ்துவின் உயர்த்துதல் எதில் அடங்கியுள்ளது?*

*பதில்: கிறிஸ்துவின் உயர்த்துதல் மூன்றாம் நாளில் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததிலும், பரலோகத்திற்கு உயரெடுக்கப்பட்டதிலும், பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பதிலும், கடைசி நாளில் உலகை நியாயந்தீர்க்க வருவதிலும் தங்கியுள்ளது.*

***(1 கொரிந்தியர் 15:4; மாற்கு 16:19; அப்போஸ்தலர் 17:31)***

விளக்கக்குறிப்பு: கிறிஸ்துவின் உயர்த்துதலின் படிகளை கீழ்வரும் வரைபடம் விளக்குகிறது.




### கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

கொலை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட கிறிஸ்துவின் அதே சரீரமே கல்லறையிலிருந்து உயிரத்தெழவும் செய்தது. அது முன்னைய சரீரத்தைவிடப் பண்பில் வித்தியாசமானதாக இருந்தபோதும் அடையாளத்தில் ஒன்றாகவே இருந்தது. வேதம் இதற்கு சான்றாக இருக்கின்றது. சிலர் கூறுவதுபோல் கிறிஸ்துவின் சீடர்கள் அன்று ஒரு தரிசனத்தைப் பெற்றதாக கற்பனை செய்யவில்லை. இயேசுவைக் கண்ட சீடர்கள் ஒரு ஆவியைக் காண்கிறதாக எண்ணிக் கலங்கி பயந்து நடுங்கினார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, "நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகம் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல் ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி தம்முடைய கால்களையும் கைகளையும் அவர்களுக்குக் காண்பித்தார்" (லூக்கா 24:37-39). திருமறையின் சாட்சியை ஏற்றுக் கொள்ளாமல் வேறுவிதமாக கிறிஸ்துவின் உயிர்த்தெழலை விளக்கப் பலரும் முயன்றுள்ளனர். இயேசு உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கை அதிகமாக இருந்ததனால் அவரது சீடர்கள் அவரைப் பார்த்ததாக இவ்வாறு கற்பனை செய்தனர் என்பது ஒரு விளக்கம். ஆனால் வேதம் இயேசுவின் சீடர்கள் இதை எதிர்பார்க்கவில்லை என்று கூறுகின்றது. இயேசு உயிர்த்தெழுந்ததை அவர்கள் பார்த்தபோது உண்மையில் அதை அவர்களால் நம்ப முடியவில்லை. வேறு சிலர் கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் தமது இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தும் நோக்கத்துடன் சீடர்கள் இவ்வாறு கட்டுக்கதை ஒன்றை ஏற்படுத்தியதாகக் கூறியுள்ளனர். ஆனால் சீடர்கள் இதற்காகத் தமது உயிரையும் பணயம் வைக்கத் தயாராக இருந்ததை நாம் நினைவு கூற வேண்டும். பொய்யை நிரூபிக்க எவரும் தங்கள் உயிரைக் கொடுக்கத் துணிய மாட்டார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் எவராலும் தகுந்த சாட்சிகளோடு மறுக்க முடியாதளவுக்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிய உண்மை நிலைத்திருக்கின்றது. ஆகவே அது உண்மையான வரலாற்றுச் சம்பவம் என்று நம்புவதைத் தவிர வேறு வழியில்லை.

### இயேசு உயரெடுக்கப்படுதல்

நாற்பது நாட்கள் அடிக்கடி தமது சீடர்களைச் சந்தித்தபின் இயேசு மகிமைக்குள் உயரெடுத்துக் கொள்ளப்பட்டார். "அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்கள் அருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்

போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்'' (அப்போஸ்தலர் 1:10, 11). இயேசுவின் இவ்வுயரெடுக்கப்படுதல் அவிசுவாசிகளின் கட்டுக்கதைகளை மேலும் பாதிக்கின்றது. இயேசு பலமுறை தனது சீடர்களுக்குக் காட்சி தந்தமை வெறும் கற்பனையாகவிருந்தால் நாற்பது நாட்களுக்குப்பின் அவை ஏன் திடீரென நிறுத்தப்பட வேண்டும். சில நவீன-இறையியலாளர்கள் இயேசு உயிர்த்தெழுந்த வரலாற்றுச் சம்பவத்தை எள்ளி நகையாடுகிறார்கள். இவர்கள் கிறிஸ்து கல்வாரியில் உயிரிழந்த அதே சரீரத்துடன் உயிர்த்தெழுந்ததை விசுவாசிக்க மறுக்கிறார்கள். ஆனால் வரலாற்றுபூர்வமான கிறிஸ்தவம் இதைத்தான் ஆணித்தரமாகப் போதிக்கிறது. ஆகவே, இப்போதனையில் நமக்குத் தெளிவிருத்தல் அவசியம். இப்போதனையாவது: ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் இயேசு கிறிஸ்து ஆவியும், எலும்பும், சதையும் அடங்கிய சரீரத்துடன் இவ்வுலகத்திலிருந்து, உயரெடுக்கப்பட்டார். அப்போது புகைப்படக்காரர் ஒருவர் இருந்திருந்தால் அவரால் அதைத் தெளிவாகப் படம் பிடித்திருக்க முடியும்.

நாமங்களுக்கும் மேலான ஒரு நாமத்தை இப்போது கொண்டிருக்கிறார். ஆகவே அவர் பிதாவும், பரிசுத்த ஆவியும் மகிமைப்படுத்தப்படுவது போல மகிமைப்படுத்தப்பட வேண்டும். இயேசு இப்போது எங்கேயிருக்கிறார் என்று நம்நால் கூறமுடியாது. ஆனால் நமக்குத் தெரிந்ததெல்லாம் அவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருத்தப்பட்டார் என்பதுதான்.ரோமன் கத்தோலிக்கர்களும், லூதரன் சபையாரும் இதை மறுதலிக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் மனித இயல்பு ஒரே நேரத்தில் உலகின் பல இடங்களில் தோற்றமளிப்பதாகப் போதிக்கிறார்கள். (முக்கியமாக திருவிருந்து அளிக்கப்படும்போது). இது கிறிஸ்துவின் மெய்யான மனித இயல்பை நிராகரிப்பதாகும், ஏனெனில் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் மனித இயல்பு தோற்றமளிக்க முடியாது. கிறிஸ்து எம்மிலே தனது ஆவியின் மூலமாக தங்கியுள்ளார் என்று திருமறை போதிக்கின்றது. ஒரு நாள் கிறிஸ்து, தான் உயரெடுத்துக் கொண்ட போது சீடர்கள் பார்த்த அதே மனித சரீரத்துடன் மறுபடியும் இவ்வுலகிற்கு வருவார்.

### கிறிஸ்து பிதாவின் வலது பக்கத்தில் அமரல்

கிறிஸ்து இப்போது பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். ஆனால் இது ஒரு உருவக மொழியாகும். ஏனெனில் கடவுளுக்கு உண்மையில் சரீரமில்லை. பிதாவின் வலது பக்கம் என்பது மதிப்புக்குரிய ஒரு இடத்தைக் குறிக்கிறது. ''ஆதலால் தேவன் அவரை எல்லா வற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் . . . எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9, 10, 11). கிறிஸ்துவும் கடவுளாக இருப்பதால் பிதா இத்தகைய உயர்நிலையை அவருக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்று சிலர் எண்ணலாம். ஆனால் இயேசு பிதாவிடத்தில் சென்றபோது கடவுளாக மட்டுமல்லாமல் மனிதனாகவும் சென்றார். ஆகவே கடவுளால் மட்டுமே கொடுக்கக் கூடிய உயர்நிலை தேவ மனிதனாகிய இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் கிறிஸ்துவுக்கு அளிக் கப்பட்ட மகிமை மிக உயர்வானது என்பதையும் நாம் உணர வேண்டும். தேவ மனிதனாகிய கிறிஸ்து இப்போது எல்லா

> "இத் திருமறைக் கல்வியை வேதபாட வகுப்புகளிலோ, ஞாயிறு பாடசாலைகளிலோ முறையாகப் போதிப்பது சபைமக்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான வேத அறிவு பெற்று வளரத் துணைபுரிவதாக அமையும்."

### கடைசி நாட்களில் கிறிஸ்து உலகை நியாயந்தீர்க்க வரவிருக்கிறார்.

கிறிஸ்து இவ்வுலகை நியாயந்தீர்ப்ப தற்காக மறுபடியும் வரவிருக்கிறார். அதைக்குறித்த பின்வரும் விளக்கங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். (அ) அந்நாளோ, நேரமோ ஒரு மனிதனுக்கும் தெரியாது. இயேசு இவ்வுலகில் இருந்தபோது அவருக்கே அது தெரிந்திருக்க வில்லை.(மத்.24:36; (மாற்கு 13:32). இதை நாம் அறிந்திருக்க வேண்டிய அவசிய மில்லை என்று இயேசு தனது சீடர்களுக்குப் போதித்துள்ளார் (அப் 1:7). (ஆ) இதிலிருந்து அவருடைய வருகைக்கான நேரத்தைத் தெரிவிக்கும் அடையாளம் எதுவும் முன்னதாகக் கொடுக்கப்படமாட்டாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அநேகர் மத்தேயு 24:5-35 இல் விளக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் அவரது வருகை சமீபிக்கும்போது நடைபெறும், ஆகவே அவரது வருகையின் காலத்தை இதைக் கொண்டு பொதுவாக அறிந்து கொள்ளலாம் என்று எண்ணுகின்றனர். ஆனால் இயேசு எல்லாக் காரியங்களும் நிறைவேறும்வரை அவ்வார்த்தைகள் பேசப்பட்ட காலத்தில் வாழ்ந்த சமுதாயம் அழிந்து போகாது என்று கூறியுள்ளார் (மத்தேயு 24:34). இந்நிகழ்ச்சிகள் அச்சமுதாயம் வாழ்ந்த காலத்தில் நிழ்ந்துள்ளதாக


## போல் யொங்கி சோவும்

## "நான்காவது பரிமாணமும்"

கொரியாவின் போல் யொங்கி சோ மேலை நாடுகளில் மட்டுமல்லாது தமிழர்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்து வருகிறார். தமிழில் அவரது நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு பலராலும் வாசிக்கப்படுகின்றன. அவரது 'ஸ்டைலை'ப் பின்பற்றி ஊழியம் நடத்த முனைபவர்களும் நம்மத்தியில் அநேகம். அவரது போதனைகள்தான் என்ன? அவரது வளர்ச்சிக்கும், பிரபல்யத்திற்கும் காரணம் என்ன என்பதை அடுத்த இதழில் வாசிக்கத் தவறாதீர்கள்.

நாம் நம்புகிறோம். இயேசுவின் வருகை நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்திற்கும், இரவில் வரும் திருடனுக்கும் ஒப்பிடப்பட்டிருப்பதால், அவரது வருகையின் காலத்தை அறிவிக்கும் அடையாளங்களை நாடித் திரிவது தவறு என்று நாம் கருதுகிறோம். ஆனால் மக்கள் அடையாளங்களைத் தேடியலையாது, பாதுகாப்பாக இருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதுதான் உண்மையில் அவரது வருகை அமையும் (1 தெசலோ. 5:3). (இ) கிறிஸ்துவின் வருகை சடுதியாக அமையும். (ஈ) அது அனைத்து மனிதர்களும் தங்களது கண்களால் பார்க்கக்கூடியதாக இருக்கும். (உ) அவரது வருகையின் போது மரித்தோரெல்லாம் கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழுவார்கள் (யோவான் 5:28). (6) உயிரோடிருக்கும் அனைவரும் கண்ணிமைக்கும் நேரத்தில் மாற்ற மடைவார்கள் (1 தெசலோ. 4:17; 1 கொரி. 5:10). (ஊ) அவ்வேளையில் கர்த்தர், மனிதகுலத்தை இரட்சிக்கப்பட்டவர்கள், இழந்து போனவர்கள் என்று இருபிரிவாகப் பிரிப்பார்.

முடிவாக கிறிஸ்து தனது தாழ்மை நிலைக் காலத்தில் (State of humiliation) எவ்வாறு தொடர்ந்து கிரியை செய்தாரோ அவ்வாறு இப்போது தனது மகிமையின் உயர்த்தப்பட்ட நிலையிலும் (State of exaltation) கிரியை செய்கிறார் என்பதை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். கிறிஸ்து இவ்வுலகை தனது நன்மை கருதி விலகவில்லை. தனது மக்களுக்காக ஓரிடத்தைத் தயார் செய்யவே அவர் சென்றார் (யோவான் 14:3). அத்தோடு அவர் அவர்களுக்காக ஜெபிக்கிறார் (எபிரே.7:25). பரலோகத்திலிருந்து அவர் தமதும், எமதுமான எதிரிகளை வெற்றி கொண்டு வருகிறார் (1 கொரி. 15:25, 26, 24). ஆகவே கிறிஸ்து தற்போது செய்து கொண்டிருக்கும் மத்தியஸ்தப்பணி ஒரு முடிவுக்கு வரும் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.. அப்போது அவரோடு நாம் இப்போது அனுபவிக்கும் ஐக்கியத்தையும் விட நேரடியான ஐக்கியத்தை அனுபவிப்போம். ஆனால், அவரது மகிமையில் உயர்த்தப்பட்ட நிலை தொடர்ந்திருக்கும்.

## பழைய இதழ்கள்

*அநேகர் பழைய இதழ்களைக் கேட்டு எழுதியிருக்கிறார்கள். சில இதழ்களின் மேலதிகப் பிரதிகள் மட்டுமே கைவசம் உள்ளன. பழைய இதழ்களில் எதையாவது இதுவரைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தேவையான இதழ்கள் எவை என்று எழுதினால் இருப்பதை அனுப்பி வைப்போம்.*

# கிருபையின் போதனைகள்

கடந்த இதழில் சீர்திருத்தப் போதனைகளின் முக்கிய அம்சங்களைப் பார்க்கத் தொடங்கினோம். அதன் முதலாவது அம்சமான கடவுளின் சர்வ ஏகாதிபத்தியத்தைப் பற்றி விளக்கமாகப் பார்த்தோம். இவ்விதழில் அதன் இரண்டாவது அம்சத்தைக் கவனிப்போம்.

### 2. பாவத்தினால் முழுமுற்றாகப் பாதிக்கப்பட்ட மனிதனின் உபயோகமற்ற நிலை

சீர்திருத்தப் போதனைகளுக்கு, அதாவது கிருபையின் போதனைகளுக்கு மாறான கருத்துக்களை ஆராய்ந்து பார்க்கும்போது கடவுளுக்கு எதிரான மனித குலத்தின் பாவத்திற்கும், கடவுளிடமிருந்து பிரிந்திருக்கும் அவர்களது ஆவிக்குரிய நிலைக்கும் முக்கியத்துவம் கொடுக்காததே அவற்றின் முதன்மையான தவறாகக் காணப்படுகின்றது. சிலர் இவற்றை முற்றாக அலட்சியம் செய்கிறார்கள். ஏனையோர் இவற்றிற்கும் தங்களது வாழ்க்கைக்கும் எந்தவித தொடர்பும் இல்லாதது போல் வாழ்ந்து வருகிறார்கள். கடவுளிடமிருந்து பிரிந்திருக்கும் மனிதனது நிலையையும், பாவம் அவனிலும், மனித குலத்திலும் ஏற்படுத்தியிருக்கும் மோசமான பாதிப்பையும் நாம் வலியுறுத்தாவிட்டால் நமது உண்மையான நிலையையும், அதிலிருந்து நம்மை விடுவிக்கக்கூடிய இரட்சகரின் அவசியத்தையும் நாம் ஒருபோதும் பாராட்ட முனைய மாட்டோம்.

கடவுள் மனிதனைப் படைத்த போது அவர் தேவர்களைப் படைத்ததைவிட வித்தியாசமான முறையைக் கையாண்டார். அவர் முழு மனித குலத்தையும் ஒரே நேரத்தில் படைக்காது, முதலில் ஒரு மனிதனைப் படைத்தார். அவனில் இருந்து மனித குலம் தோன்றுமாறும், அம்மனித குலத்தின் நியாயபூர்வமான பிரதிநிதியாக இருக்குமாறும் அவனைப் படைத்தார். கடவுள் அவனுக்கு அளித்த நிலையில் இருந்து அவன் தவறாதிருந்தால், அவன் பிரதிநிதித்துவப்படுத்தும் முழு மனித குலமே பரிசுத்தமான தேவர்களைப்போல என்றும் நிரந்தரமான பரிசுத்தத்தோடு இருந்திருக்க முடியும்.

ஆகவே, முதல் மனிதனான ஆதாம் மனிதகுலத்தின் பிரதிநிதியாக முழுமையாகவும் பரிசுத்தமாகவும் கடவுளுக்குக் கீழ்ப்படியும்படியாக சோதிக்கப்பட்டான். அவன் தவறினால் அதற்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதையும் கடவுள் அவனுக்குத் தெளிவாகத் தெரிவித்திருந்தார் (ஆதி. 2:16-17).. மரணமே அத்தண்டனையாகும். கடவுளுக்குக் கீழ்ப்படியாது வீழ்ந்த தேவர்களுக்குக் கிடைத்த அதே தண்டனையே மனிதனுக்கும் தீர்மானிக்கப்பட்டது. கடவுள் மனிதனுக்கு அளித்த சோதனை எந்தவித குழப்பமுமற்றதாக, அனுக்குச் சார்பானதாக, இலகுவானதாக இருந்தது. அதிலிருந்து அவன் தவறினால் அவனால் எந்தவித சாக்குப்போக்கும் சொல்லமுடியாது.

ஆனால் ஆதாம் கடவுளுக்குக் கீழ்ப்படியாது பாவம் செய்து பாவத்தில் வாழ்ந்தான். முழு மனித குலமும் அவனது பாவத்தில் பங்கு கொண்டது. அப்பாவத்தின் பலனாக ஆவிக்குரிய மரணத்தை அல்லது கடவுளிடமிருந்து பிரிந்திருக்கும் நிலை ஏற்பட்டது. ஆதாம் பாவத்தில் வீழ்ந்தபின் 930 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்திருந்தபோதும், பாவத்தில் வீழ்ந்தபோது உடனடியாக கடவுளோடு தனக்கிருந்த ஆவிக்குரிய அனுபவத்தை இழந்து அவரிடமிருந்து பிரிக்கப்பட்டான். அந்நாளிலிருந்து அவனது வாழ்க்கை மரணத்தை நோக்கி இடைவிடாது துரித நடைபோட்டது. மனிதன் இவ்வுலக வாழ்க்கையில் சாத்தானும், அவனது

துர் ஆவிகளும் செய்யுமளவுக்கு பாவத்தைச் செய்யாதவாறு பொது வான கிருபை அவனைத் தடுத்து வைத்திருக்கிறது. இப்பொதுவான கிருபையின் ஆசீர்வாதங்களான குடும்பம், நண்பர்கள், பணவசதி, சுகநலம், இயற்கை அழகு ஆகிய வற்றை எல்லா மனிதர்களும் அனு பவிக்கிறார்கள். இருப்பினும் மனிதன் பாவத்தின் வழிகளிலேயே சென்று கொண்டிருக்கிறான். இத்தடைகள் இல்லாவிட்டால துர் ஆவிகள்போல் மோசமானவனாக அவனால் மாறி விட முடியும். தனது பாவநிலையில் அவன் கடவுளுக்குப் பயந்து அவரை விட்டு ஓடிவிட முனைகிறான். அதுமட்டுமல்லாமல் துர் ஆவிகளைப் போல அவரை முற்றாக வெறுக்கவும் செய்கிறான். அவனை இப்படியே விட்டுவிட்டால் தனது நிலையில் அவன் தொடர்ந்திருப்பான். பவுல் கூறுவதுபோல, "நீதிமான் ஒருவனாகி லும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை'' (ரோமர் 3::10, 11). இந்நிலையில் இருந்து கடவுளின் மகிமையுள்ள வல்லமை மட்டுமே அவனைக் கரை சேர்க்க முடியும். அவ்வாறு அவன் காப்பாற்றப்பட வேண்டுமானால் கடவுளே அதற்கான முதல் நடவடிக்கையை எடுத்து, அவனது பாவத்திற்கான கிரயத்தைச் செலுத்தி, அவனது குற்றவுணர்வை நீக்கி மறுபடியும் பரிசுத்தமான வனாகவும், நீதிமானாகவும் மாற்ற வேண்டும்.

இதையே கடவுள் செய்கிறார். தனது சர்வ ஏகாதிபத்தியத்தினால் சாத்தானின் இராஜ்யத்திலிருந்து மனிதரை விடுவித்து பரலோக இராஜ்யத்தில் அவர்களை சேர்க்கி றார். இவர்களையே 'தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் என்று திருமறை 25 தடவை வர்ணிக்கின்றது. பின்வரும் வசனங்களை நாம் உதாரணமாகப் பார்க்கலாம். "அந்நாட்கள் குறைக்கப் படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்'' மத்தேயு 24:22, "நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்று நாங் கள் அறிந்து" 1 தெசலோ.1:4, "அப்படி யானால் என்ன? இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார் கள்; தெரிந்து கொள்ளப்பட்டவர் களோ அதை அடைந்திருக்கிறார்கள்" ரோமர் 11:7, ''தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டு கிறவன் யார்?" ரோமர் 8:33, "தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது" 1 பேதுரு 1:1.

வேதம், கடவுள் மனித குலத் தில் அநேகரை அவர்களுடைய பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவித்துள்ளார் என்று கூறுகிறது. இதைச் செய்யும் பொருட்டு திரித்து வத்தின் இரண்டாம் நபரான கிறிஸ்து கன்னிப்பிறப்பின் மூலம் மனித இயல்பைத் தன்மேல் சுமந்து மனித குலத்தில் ஒரு சாதாரண குழந்தை யாக அவதரித்தார். இவ்வாறாக கடவுள் நம்மில் ஒருவராகப் பிறந்தார். இயேசு தனது மக்களின் பிரதிநிதியாக பூரணமான பாவமற்ற வாழ்க்கையை வாழ்ந்து, தன்னைத் தனது நியாயப் பிரமானங்களுக்கும் உட்படுத்தி, பாவத்திற்கு கடவுள் விதித்துள்ள தண்டனையையும் தன்னில் தாங்கி அனுபவித்தார். தனது பாவமற்ற வாழ்க்கையில் ஆதாம் மீறிய கடவு ளின் நியாயப்பிரமானத்தைப் பூரண மாகக் கைக்கொண்டு தனது மக்களுக்காக பூரணமான நீதியையும், பரலோக இராஜ்யத்தை அடையும் உரிமையையும் பெற்றுத் தந்தார். அவரது மக்கள் எத்தகைய பாடுகளை நித்திய காலமும் நரகத்தில் அனுபவித்திருக்க வேண்டுமோ அதை கிறிஸ்து தன்னில் அனுபவித்தார். இவ்வாறாக அவர் தனது மக்களை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவித்தார். கிறிஸ்துவின் மீட்பின் பலன்கள் பிதாவினால் அவருக்கு அளிக்கப்பட்ட மக்களிடத்தில் பரிசுத்த ஆவியின் மூலம் நிறைவேற்றப் படுகிறது. இதையே அவர்கள் பரிசுத்த ஆவியின் மூலம் மறுபிறப்புப் பெறு கிறார்கள் என்று கூறுவர். அதாவது ஆவிக்குரிய வாழ்வில் உயிரளிக்கப் பட்டு புதுப்பிறப்பை அடைகிறார்கள்.

இதையே பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் 5:12, 19 இலும், எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் 2:1-10 இலும் விளக்குகிறார்.


கிறிஸ்த இறையியலில் மூன்று வித முக்கிய நடவடிக்கைகளை அவதானிக்கலாம். முதலாவதாக, ஆதாமினுடைய பாவம் நம்மெல் லோர் மீதும் வைக்கப்பட்டு - அதா வது நியாயப்படி நமது கணக்கில் வைக்கப்பட்டு - நாமெல்லோரும் அதற்குப் பொறுப்பாளிகளாகவும், நியாயப்படி அதன் பலாபலன்களை அனுபவிக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. இதனையே மூல பாவம் என்று கூறுவர். இரண்டாவ தாக, இதே முறையில், நமது பாவம் கிறிஸ்துவின் கணக்கில் வைக்கப்பட்டு அதன் பலாபலன்களை அவர் அனுபவிக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. மூன்றாவதாக, கிறிஸ்துவின் நீதி நமது கணக்கில் வைக்கப்பட்டு நாம் பரலோகம் செல்லும் உரிமையையும் அளிக்கிறது. இவை ஒவ்வொன்றும் சட்டப்படி யான நடவடிக்கைகள். ஆதாமிட மிருந்து நாம் நிந்தனையையும், அழிவையும் பெற்றுக்கொண்டுள்ளது போல் கிறிஸ்துவிடமிருந்து இரட்சிப் பைப் பெற்றுக் கொள்கிறோம். இம்மூன்று நடவடிக்கைகளில் எதை யாவது நிராகரிப்பது கிறிஸ்த வத்தையே நிராகரிப்பது போலாகும்.

இவ்வாறாக ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்குமிடையில் இரட்சிப்பைக் குறித்த ஒரு பெருந் தொடர்பிருப் பதைக் காணலாம். பவுல் வசனத்திற்கு மேல் வசனமாக நம்மைப் பிடித் திருப்பது வெறும் வியாதி அல்ல, அதைவிடக் கொடூரமான ஆவிக்குரிய மரணம் என்பதை வெளிப்படுத்து கிறார். கிறிஸ்துவும், ''ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் அவன் தேவனுடைய இராஜ்யத்தைக் காண மாட்டான்" (யோவான் 3:3) என்றும், "என் வசனத்தை நீங்கள் ஏன் அறியா திருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?" என்றும் கூறியுள்ளார். ஆவியினால் புதுப்பிக்கப்படாத மனிதன் கடவுளின் இராஜ்யத்தைப் பற்றிய உண்மைகளைக் கேட்டாலும் அவற்றைப் புரிந்து கொள்ள முடியா திருப்பதுடன், கடவுளின் இராஜ் யத்தைப் பார்க்கவோ அதை அடை யவோ இயலாதவனாக இருக்கிறான். இந்நிலையில் கடவுள் அவனைத் தொடர்ந்து விட்டிருந்தால் வீழ்ந்து போன தேவ தூதர்களைப்போல மீளமுடியாத வீழ்ச்சியினை அனுப வித்திருப்பான்.

எவ்வாறு இறந்துபோன ஒருவன் தன்னை உயிர்ப்பித்துக் கொள்ள இயலாதோ அதேபோல், ஆவியில் இறந்துள்ள ஒரு மனிதன் தன்னை ஆவியில் புதுப்பித்துக் கொள்ள இயலாதவனாக இருக் கிறான். ஆகவே அவனுக்கு இயற்கை யின் வரம்புகளை மீறி அதிசயங்கள் செய்யும் கடவுளின் துணை தேவைப் படுகிறது. எனவே தனது வல்லமை யின் மூலம், பரிசுத்த ஆவியால் சாத்தானின் பிடியில் இருந்து நம்மை விடுவித்து கடவுள் தமது ஆவியின் இராஜ்யத்தில் குடியேற வைக்கிறார். இவ்வனுபவத்தைத் தரும் நற்செய்தி எல்லோருக்கும் கொடுக்கப்பட்டா லும், கடவுளால் தெரிந்த கொள்ளப் பட்டவர்கள் மட்டுமே இதனைத் தம் வாழ்வில் அடைகிறார்கள். அவர்களே தேவ ஆவியினால் புதுப்பிக்கப்பட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள் கிறார்கள்.

(வளரும்)

# வில்லியம் கேரி



**'கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்' என்று கூறி, வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கே மகோன்னதமாக சேவை செய்தவரும், நவீனகால அருட்பணி ஊழியத்திற்கு அடிக்கல் நாட்டியவருமான வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம்.**

## ஊழிய அழைப்பும், இந்தியப் பயணமும்

தனது கனவுகளெல்லாம் நனவாகுமாப்போல் அனைத்தும் நடந்து வருகிறதைப் பார்த்த கேரியின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதற்கு மேலும் துணை செய்வதுபோல் அவருக்கு ஜோன் தோமஸின் அறிமுகம் கிட்டியது. ஜோன் தோமஸ் பெங்காலில் ஏற்கனவே மிஷனரியாக இருந்தவர். மீண்டும் அங்கு போக நிதி திரட்டிக் கொண்டிருந்த அவரைக் கேரி பாப்திஸ்து சங்கத்திற்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஜோன் தோமஸ் தன்னோடு போக ஒரு மிஷனரியையும் தேடிக்கொண்டிருந்த தால் கேரி இதனைக் கர்த்தரின் செயலாகக் கருதினார். டாகீட்டிக்குப் போக மனம் வைத்திருந்த கேரி பெங்காலுக்குப் போகும் நிலை ஏற்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தார். சங்கம் தோமஸைச் சந்தித்து அவரது அனுபவங்களைக் கேட்டது. அக்கூட் டத்தில் கேரி தன்னை தோமஸுடன் பெங்காலுக்குப் போக ஒப்புக் கொடுத் தார். உணர்ச்சிவசப்பட்ட ஜோன் தோமஸ் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அன்று முதல் கேரிக்கு இந்தியாவின் நினைவே இருந்தது.

இந்தியாவுக்குப் போகத் தீர் மானித்தாயிற்று. ஆனால் இதை எப்படித் தன் மனைவியிடம் கூறி அவரைச் சம்மதிக்க வைப்பது என்ற பெரும் பிரச்சனை கேரிக்கு இருந்தது. கேரியின் மனைவி இவ்வேளையில் பிரசவத்தை எதிர்பார்த்து இருந்தார். கடலையே கண்டறியாத டொரத்தி யைக் கல்கத்தாவிற்குத் தன்னோடு வருமாறு எப்படி சமாதானப்படுத்து வது என்று கேரி கலங்கினார். அக்காலத்தில் கல்கத்தா கோடிக்கணக் கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது என்ற எண்ணமும் மக்கள் மத்தியில் இருந்தது.

கேரிக்கு குடும்பத்தில் அதிகப் பற்றிருந்தது. அவரது மிஷனரிக்கனவு என்றுமே குடும்பத்திற்கு எதிராக இருந்ததில்லை. ஆனால், டொரத்தி கேரி, கேரியின் முடிவைக் கேட்டுக் கலங்கினார். துடித்தார். தன்னால் வர முடியாது என்று அடம் பிடித்தார். ஆனால் கேரிக்கு தனது முடிவை மாற்றிக் கொள்ளும் எண்ணம் இருக்கவில்லை. கர்த்தரின் அழைப் பைத் தெளிவாக உணர்ந்திருந்த கேரிக்கு எந்த எதிர்ப்பும் பெரிதாகத் தோன்றவில்லை. கர்த்தரின் அழைப் புக்குக் கீழ்ப்படிந்த கேரி தனது மனைவி பிள்ளைகளை இங்கிலாந்தில் விட்டுவிட்டு கல்கத்தாவிற்குச் செல் லத் தயாராகவிருந்தார். அவரது முடிவைக் கேட்ட சபையும் அதிர்ந் தது. கேரியின் தந்தை தன் மகனுக்குப் பயித்தியம் பிடித்து விட்டதாகக்

சான்றோர் சரிதம்

கருதினார். புளரும், சட்கிளிப்பும் கேரியின் மனைவியையும் அவரது தந்தையையும் சமாதானப்படுத்த முனைந்தனர். ஆனால் எந்தச் சமா தானத்தாலும் டொரத்தியை மாற்ற முடியவில்லை. சபைக்கூட்டத்தில் அவர்கள் எதிர்க் கருத்துக்களைத் தெரிவித்தனர். ஆனால் ஒரு அங்கத் தவர் எழுந்து கேரியின் விசுவாசத் தையும், கடமையுணர்ச்சியையும், கர்த்தர் அவருக்குக் கொடுத்துள்ள அழைப்பையும் பற்றிப் பெரிதாக எடுத்துரைத்து தங்கள் போதகரின் முடிவுக்கு எதிராக இருப்பது சரி யில்லை என்று வாதிட்டார். அவ ருக்கு இடையூராக இல்லாமல் கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண் டார். இறுதியாக அனைவரும் கண்ணீ ருடன் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

ஒரு பிரச்சனை தீர்ந்தது. ஆனால் இன்னுமொன்று காத்திருந் தது. இங்கிலாந்தின் பாப்திஸ்து சபைகளை இவ்வூழியத்திற்கு அர்ப் பணிக்குமாறு வற்புறுத்த புளரும், சட்கிளிப்பும், கேரியும் அச்பைகளை நாடிச் சென்றனர். ஆதரவாகவிருந் தவர்கள் சிலர், இது ஆகுமா என்று வியந்தவர்கள் பலர், ஆலோசனைகள் தந்தவர்கள் ஆயிரம். இறுதியில் பல சபைகளிலும் பேசி முடித்தபின் கேரி கல்கத்தாவிற்குப் போக வேண்டிய நாள் நெருங்கியது. கேரியின் சக போதகர்கள் அவரது சொந்த ஊரில் கூடி அவரை ஆசீர்வதித்து அனுப்பி வைக்கும் விழாவொன்றினை ஏற்பாடு செய்தனர். அன்று இந்தியாவிற்கான தங்கள் தாய்நாட்டின் மிஷனரியைப் பார்ப்பதற்காக சபையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. மார்ச் 26 ஆம் திகதி கேரி தனது மனைவிடம் இருந்து விடை பெற்றார். மூன்று வருடங்களுக் குப்பின் மீணடும் வருவேன் என்று கேரி தன் மனைவியிடம் வாக்களித் தார். ஆனால் கடவுளின் திட்டம் வேறாகவிருந்தது.

இங்கிலாந்திலிருந்து இந்தியா விற்குப் போவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. கப்பல் கிடைக்காம லும், அரசாங்கத் தடைகளாலும் கேரியும், ஜோன் தோமஸும் பல நாட்கள் பெரும் அவதிகளுக்குட் பட்டனர். இந்நாட்களில் கேரி போர்ட்ஸ்மத்திலிருந்து தன் மனைவி க்குக் கடிதங்கள் எழுதித் தனது அனு பவங்களைப் பகிர்ந்து கொண்டார். ஆனால் தேவ கிருபையினால் நிலமை கள் மாறி கேரி தனது மனைவி குழந்தைகளையும் தன்னோடு அழைத் துச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட் டது. உடனடியாக விற்க வேண்டிய வைகளை விற்று டொரத்தி தன் குழந்தைளோடும், பெட்டி படுக்கை களோடும் கேரியுடன் இந்தியாவுக்கு கப்பலேரினார். இவ்வனுபவத்தைப் பற்றி எழுதும் கேரி, "இந்நாள் என் இதயத்தில் அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது" என்று குறிப்பிடு கிறார். கேரியின் கனவுகள் நனவாயின. இந்தியாவிற்கு இயேசுவை அளிக்கும் இமய முயற்சியும் ஆரம்பமானது.




**புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம்**

# கிருபையின் மாட்சி


எழுதியவர்: ஆபிரகாம் பூத்
தமிழாக்கம்: வேதவள்ளி மெசாயாடொஸ்
வெளியீட்டாளர்: சுவிஷேச ஊழிய நூல் நிலையம்
கிடைக்குமிடம்: தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்
4, கெல்லீஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை 600 010

இந்நூலை இவ்விதழில் அறிமுகப்படுத்துவது ஒருவிதத்தில் மிகப் பொறுத்தமானது. ஏனெனில் இவ்விதழில் தேவ கிருபையின் மகிமையைப் பற்றிய மேலும் பல நல்ஆக்கங்களை வாசகர்கள் பார்க்கலாம். ஆபிரகாம் பூத் கூறுவதுபோல், சீர்திருத்த சபைகளுக்கும் ரோமன் கத்தோலிக்க சபைகளுக்கும் இடையில் உள்ள மிகப் பெரிய வித்தியாசம் கிருபையின் போதனைகளைப் பற்றியதே. சீர்திருத்த சபைகள் கிருபையின் மூலம் மட்டுமே ஒருவன் இரட்சிப்பை அடையலாம் என்று போதிக்க கத்தோலிக்க சபை கிரியைகளின் மூலம் அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வாதிடுகின்றது. இது இன்று கத்தோலிக்க சபைகள் மட்டும் வாதிடும் வாதமாக இல்லாமல் சுவிஷேசக் கோட்பாட்டாளர் மத்தியிலும் வேறு விதங்களில் காட்சியளிப்பதை வாசகர்கள் அறிவார்கள். ஆர்மீனியனிசக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவர்களும் இதே போக்கையே பின்பற்றுகின்றனர். சுவிஷேசத்தைக் கேட்பவர்களைக் கரம் தூக்க வைத்து கடவுளிடம் கொண்டுவர முயலும் அனைவரும் தேவ கிருபையின் மாட்சியைப் புரிந்து கொள்ளாதவர்களே. தேவ கிருபைக்கு மதிப்பளிப்பவர்கள் மனித சக்தியை நம்பிக் காரியமாற்ற முயல மாட்டார்கள்.

கிருபையின் மாட்சியைக் குறித்த சத்தியமே பாவ உணர்வு பெற்ற மக்களுக்கு ஆறுதலையும் பரிசுத்தத்தையும் அருள வல்லதாயிருக்கிறது என்று உறுதியாய் நம்பும் நூலாசிரியர், பதின்மூன்று அதிகாரங்களில் கிருபையின் மாட்சியைத் திருமறையின் அடிப்படையில், தெளிவாகவும், அழகாகவும் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இன்று நூல்கள் எழுதும் அநேகர் சத்தியத்தை நம்பி அவற்றை எழுதுவதில்லை. சத்தியத்தை மட்டுமே எழுத வேண்டும் என்ற கொள்கையையும் கடைப்பிடிப்பதில்லை. இதற்கு மாறாக ஆபிரகாம் பூத் சத்தியத்தில் தனக்கிருக்கும் நம்பிக்கையும் உறுதியுமே இந்நூலை எழுதத் தூண்டியதாகக் கூறுகிறார். அவ்வுறுதி தனக்கில்லாதிருந்தால் இவற்றைக்குறித்துப் பேசவோ எழுதவோ துணிந்திருக்க மாட்டேன் என்று அறிவிக்கிறார்.

கிருபையின் சத்தியத்தைப் புரிந்து கொள்ள மறுப்பவர்களும், அதனை நிர்த்தாட்சன்யமாக எதிர்ப்பவர்களும் கடவுளின் தனிப்பெரும் ஆட்சியை எதிர்க்கிறார்கள் என்பதை உணர்வதில்லை. தேவகிருபை கடவுளின் தனிப்பெரும் ஆட்சியின் மகிமையை எடுத்துரைக்கிறது. மனிதனின் துணையில்லாமல், வேறு எதன் தேவையும் இல்லாமல் தனது வல்லமை, தனிப்பெரும் சித்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதகுலத்தில் அநேகரைத் தனது கிருபையின் மூலம் தெரிந்து கொண்டு, தனது ஒரே குமாரனான கிறிஸ்து இயேசுவின் மூலம் அவர்களுக்கு இரட்சிப்பையும் அளிக்கிறார் சர்வ வல்லவரான தேவன். இச்சத்தியத்தில் நம்பிக்கை வைக்க மறுப்பவர்கள் இரட்சிப்பிற்கு தங்களது பலவீனமான சுய வல்லமையையும், குறைந்தளவான ஞானத்தையும் மட்டுமே நம்பி நிற்க வேண்டும். அது ஒருபோதும் அவர்களைத் தேவனிடத்தில் கொண்டு வராது என்று வேதம் தெளிவாகப் போதிக்கின்றது. நீதியற்றவர்களான மனிதர்களை தேவனே நீதிமான்களாக்குகிறவர் என்று பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் கூறுகிறார் (ரோமர் 8:33).

வல்லமையற்றதாக, கிறிஸ்தவம் எனத்தன்னைக் காட்டிக் கொண்டு, பாவிகளான மனிதர்களுக்கு இரட்சிப்பின் பெயரில் போலித்தனமான உறுதியை வழங்கிவரும் ஒரு சுவிஷேசப் போதனை தமிழர்கள் மத்தியில் காவிரி போல் பெருகி ஓடும் இக்கடைசி நாட்களில், சத்தியத்தில் ஆர்வமுள்ளவர்கள் நிச்சயமாக வாங்கிப் படித்து சிந்தித்துப் பயனடைய வேண்டிய சிறு நூல் 'கிருபையின் மாட்சி.' ஆபிரகாம் பூத் இன்று எம்மத்தியில் இல்லாவிட்டாலும் அவரறிந்து ஆனந்தமடைந்த தேவகிருபை இந்நூலின் மூலம் நம்மோடு பேசட்டும்.



**. . . எண்ணங்கள் . . . எண்ணங்கள் . . . எண்ணங்கள் . . .**

## கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை

தமிழில் இப்படியொரு பத்திரிகையை வெளியிடும் தங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை மற்றிய கட்டுரைகளை நூலாக வெளயிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். பலருக்கும் அது பயனுடையதாக இருக்கும். நான் அனுப்பியிருக்கும் முகவரிகளுக்கு பத்திரிகையை அனுப்புங்கள்.

*மித்திரன் ஜோகரத்தினம், கனடா*

உங்கள் பத்திரிகை எனக்கு எப்படியோ கிடைத்தது. அதை வாசிக்க வாசிக்க நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எது கிறிஸ்தவம்?, கரத்தர் கட்டியெழுப்பும் திருச்சபை, சுவிஷேசக் கோட்பாட்டியக்கம் சிறப்புக் கட்டுரை, வினாவிடையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள் இவை அருமையிலும் அருமை. பத்திரிகையை எனக்குத் தவறாது தொடர்ந்து அனுப்புங்கள்.

*டேவிட் இரா. ஜோன், கண்டி, ஸ்ரீலங்கா*

## பத்திரிகைக்கு நன்றி!

தங்களுடைய திருமறைத்தீபம் பத்திரிகை எமது சபைக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. தொடர்ந்து பழைய இதழ்களையும் சேர்த்து அனுப்பி வைத்தீர்களானால் பயனுள்ளதாக இருக்கும்.

*எம். ஸ்டீபன், நுவரெலிய, ஸ்ரீலங்கா*

தங்களது திருமறைத்தீபம் இனிமையான தமிழில் அதுவும் வெளிநாட்டில் அச்சாகி தமிழ் நாட்டில் படிக்க மிகவும் ஆனந்தமாய் உள்ளது. வேத வசனங்களை ஆராய்ந்து படிக்க இத்தீபமானது பேருதவியாய் இருக்கிறது.. தொடர்ந்து இப்பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொளிகிறேன்.

*எஸ். சுந்தரராஜ், ஊட்டி, தமிழ்நாடு*

இந்துக்குடும்பத்தில் பிறந்து நான் இயேசுவை இரட்சகராக அறிந்து கொண்டுள்ளேன். இப்போது வேதாகமக் கல்லூரியில் முதல் வருடம் படிக்கிறேன். நண்பன் ஒருவனிடமிருந்து திருமறைத்தீபத்தை வாங்கிப் படித்தேன். மிகவும் ஆழ்ந்த சத்தியங்களை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும்வகையில் எழுதி வருகிறீர்கள். பத்திரிகையை எனது முகவரிக்கு தவறாது அனுப்புங்கள்.

*த. இளவரசன், சென்னை, தமிழ்நாடு*

நீங்கள் அனுப்பிய திருமறைத்தீபம் பத்திரிகை எனக்குக் கிடைத்தது. உங்கள் மூலம் வேதாகமத்தின் உண்மைகளை எங்களுக்கு விளங்கப்படுத்தும் ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன். உங்களுக்காகவும் இந்த ஊழியத்திற்காகவும் நான் தொடர்ந்து ஜெபிக்கிறேன். எனது நண்பரின் முகவரிக்கும் பத்திரிகையை அனுப்பி வையுங்கள்.

*ஜூலீட், இலண்டன், இங்கிலாந்து*

## வாசகர்கள் கவனத்திற்கு!

வாசகர்களில் பலர் பத்திரிகையின் சந்தா விபரம் பற்றிக் கேட்டு எழுதியுள்ளார்கள். வேறு சிலர் எவ்விதத்தில் தாங்கள் இவ்வூழியத்திற்கு உதவமுடியும் என்றும் கேட்டுள்ளார்கள்.

பத்திரிகை பலரது அன்பூழியத்தின் துணையால் இலவசமாக வெளியிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. ஆகவே வாசகர்கள் இதனை எதுவித சந்தாவுமின்றிப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இவ்வூழியத்திற்குத் துணை செய்ய ஆர்வமுள்ளவர்கள் உங்கள் காணிக்கைகளை பத்திரிகையின் நியூசிலாந்து முகவரிக்கு வெளிநாட்டு வங்கிக் காசோலை மூலமாக அனுப்பி வைக்கலாம்.

இதை வாசித்துப் பயனடையும் அனைவரும் தொடர்ந்து எழுதும் கடிதங்கள் எமக்கு ஊக்கம் தரும். அத்தோடு ஏனையோருக்கும் இதனை அறிமுகப்படுத்துவதோடு தவறாது உங்கள் அன்றாட ஜெபத்தில் இவ்வூழியத்தை நினைவு கூறுங்கள். இதுவே வாசகர்களாகிய நீங்கள் செய்யக் கூடிய பேருதவி.

“கர்த்தர் பெரியவர் என்றும், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன். வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும் எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்.”

*சங்கீதம் 135:5, 6*